“இடர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேசச் செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான நெறி முறைக் கோட்பாடுகள்” பற்றிய

# ஒரு விளக்கக் குறிப்பு.

(*IFRC/ICRC நெறிமுறைக் கோட்பாடுகள்)*

யூன் 2005

## முன்னுரை

2004ம் ஆண்டு இலங்கையைத் தாக்கிய சுனாமி அனர்த்தம் பாரிய அழிவை ஏற்படுத்தியது: 31,000க்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்தது. சுமார் 100,000 வீடுகளை அழித்தது: ஆயிரக் கணக்கானோரை வீடற்றவர்களாக்கியது: அவர்களின் குடும்பங்களையும் வாழ்வாதாரத்தையும் சின்னாப்பின்னமாக்கியது: கரையோரக் கட்டமைப்பைக் கணிசமான அளவுக்குச் சேதப்படுத்தியது: இயற்கைப் புவியமைவுகளைச் சீரழித்தது. இதன் ஒட்டுமொத்தமான தாக்கம், இருபது ஆண்டுகால போரின் மூலம் மனிதன் ஏற்படுத்திய அழிவோடு அடிக்கடி ஒப்பிடப்படுகின்றது.

ஆனால், சுனாமிக்கான விளைவுபடுத்தலானது ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதற்காக இலங்கையர் சமூகத்தின் ஒன்றிணைந்து செயல்படும் நிர்ணயத்தை எடுத்துக் காட்டியது, அலையலையாய்ச் சர்வதேசச் சமூகத்தின் ஆதரவையும் நல்லுறவையும் தோற்றுவித்தது. மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கு மக்கள் தாமாகவே முன்வந்தார்கள். தனிப்பட்டவர்களும் அரசு சாரா அமைப்புக்களும் தனியார் நிறுவனங்களும் நாடுகளும் இரு தரப்பு மற்றும் பல தரப்பு முகவர் நிறுவனங்களும் பெரிதும் போற்றத்தக்க வகையில் உதவிகளை வாரி வழங்கின. அதேவேளை, சுனாமிக்கு முன்னர் இருந்ததைவிட கூடுதலான அமைப்புகள் நாட்டின் புனர்வாழ்விலும மீள்நிர்மாணத்திலும் அபிவிருத்தியிலும் ஈடுபட்டன.

ஆழிப் பேரலையின் ஆரம்பத்தில் இருந்தே இப்பணிகளில் ஈடுபாடு கொண்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆதரவு முகவர் அமைப்புக்கள், நிவாரணமும் மீட்பு முயற்சிகளும் செயலூக்கமுள்ளவையாக, முரண்பாட்டுக் கூருணர்வு உள்ளவையாக, முன்னைய அனர்த்தங்களின் போது சர்வதேச ரீதியில் பெறப்பட்ட அனுபவங்களுக்கு ஏற்புடையவையாக இருப்பதற்குத் தீர்க்கமான சில அம்சங்களை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின. இதுதான், இந்தப் பிரச்னைகளைக் கையாள்வதற்காகத் தொடர்ச்சியான செயற்பாடுகள் பலவற்றில் ஈடுபாடு கொள்ளவும் இவற்றைக் கையாள்வது எப்படி என்பது பற்றிய வழிகாட்டுக் கோட்பாடுகள் சம்பந்தமாய் ஒரு பொதுவான புரிந்துணர்வைக் காணும் மார்க்கத்தில் பாடுபடவும் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்புக்கும் பெர்கோ.ஃ.ப் நிதியத்துக்கும் ஒரு தொடக்க நிலையாக இருந்தது.

இத்தகைய செயற்பாடுகளில் ஒன்று, "இடர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேசச் செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான நெறி முறைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. இந்த நெறிக்கோவை, சுனாமிக்குப் பின்னரான மீளுகையுடன் சம்பந்தப்பட்ட CHA வேலைத்திட்டப் பின்னணியில் அங்கீகரிக்கப்பட்டது. சுனாமிக்குப் பின்னர், முரண்பாட்டுக் கூருணர்வு மற்றும் இதர வழிகாட்டுக் கோட்பாடுகள் பற்றி கலந்துரையாடல் நடந்தது. இந்தக் கலந்துரையாடலின் மூலமாக, நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து மக்களும் அமைப்புகளும் சர்வதேச ரீதியிலான தரங்களைத் தம்முடைய பணிகளில் கடைப் பிடிப்பதற்குப் பக்கபலமாக இருக்கும் வகையில் வழிகாட்டு நெறிக்கோவையின் 10 கோட்பாடுகள் தொடர்பில் ஆழமான விளக்கத்தைப் பெறுவது பயனுள்ளதாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தோம். முதலாவது வாசகத்தை வரையுமாறு CHA, Berghof Foundation, GTZ, UNDP ஆகியவற்றைக் கொண்ட குழுவினரிடம் கேட்டுக் கொண்டோம். இந்த வாசகமானது தனிப்பட்ட பலரிடம் இருந்தும் அமைப்புக்களிடம் இருந்தும் பெறப்பட்ட கருத்துக்களை வைத்துத் தீர கலந்தாலோசித்த பின்னர் திருத்தி அமைக்கப்பட்டது.

இந்த செயன்முறையில் பங்கேற்ற அனைவருக்கும், குறிப்பாக இந்த விளக்கங்களை வரைவதில் முக்கியமானவராக விளங்கிய அனுஷ்கா அபேநாயக்கவுக்கும் இதில் பெரும் பங்களிப்பைச் செய்து தீர்க்கமான தகவல்களை வழங்கிய டேவிட் வேலே, தினூஷா பத்திராஜ, மின்னா தாஹீர், கலாநிதி மார்க்கஸ் மேயர், ஜோ வில்லியம் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜீவன் தியாகராஜா, மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு
கலாநிதி நோபர்ட் ரோபர்ஸ், முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பெர்ஹோப் நிதியம்.

**அறிமுகம்**

2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் நாள் கரையோரச் சமூகங்களைச் சுனாமி தாக்கியது. இது, உலகம் முழுவதிலுமுள்ள தனிப்பட்டோர், சமூகங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், தனியார்த் துறையினர் மற்றும் அரசாங்கங்களின் பரிவுணர்வையும் ஆதரவையும் என்றும் இல்லாதவாறு தோற்றுவித்தது. சுனாமி அனர்த்தம் சம்பந்தமான சர்வதேச விளைவுபடுத்தல், இலங்கையில் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குத் புதிய சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. மேலும், பாதிக்கப்பட்ட நாடுகளிலும் சர்வதேச சமூகத்திலும் உள்ள அனைவரும், அதாவது அரசாங்கங்களும் சிவில் பங்காளிகளும் ஒரே மாதிரியாக விளங்கிக் கொள்ள வேண்டிய அவசியமுள்ள தீர்க்கமான சவால்களையும் அது தோற்றுவித்துள்ளது. இந்த அனர்த்தம், இன்றியமையாத மனிதநேய விளைவுபடுத்தலின் அரசியல், சமூக-பொருளாதார மற்றும் நீண்ட காலப் பின்விளைவுகள் பற்றிய பல வினாக்களையும் விட்டுச் சென்றிருக்கின்றது.

மனிதநேயக் கூட்டமைப்புக்களின் அமைப்பினதும் (CHA), கொடையாளர் பணிக் குழுவினதும் (DWG) ஒத்துழைப்போடு Berghof Foundation சுனாமி விளைவுபடுத்தலில் முரண்பாட்டுக் கூருணர்வு பிரச்னை சம்பந்தமாக நிபுணர்களது ஒரு சிறிய கூட்டத்தை 2005, ஜனவரி மாத நடுப்பகுதியில் நடத்தியது. சர்வோதயம், மார்கா, MWRAF, IMCAP, FCE, CPA, CHA, TRO, SSA, SAPNA, USAID, ADB, WB, SIDA,நெதர்லாந்துத் தூதரகம், UNDP, DFID, FLICT, GTZ,ஸ்விட்சர்லாந்துத் தூதரகம், பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம், NORAD, CIDA, VSO, UNICEF, முரண்பாட்டுக் கற்கைகளுக்கான Berghof Foundation ஆகியனவும் பங்குபற்றிய அமைப்புக்களில் அடங்கும்.

``சுனாமிக்குப் பின்னரான சூழமைவில் முரண்பாட்டுக் கூருணர்வு" பற்றி 2005, ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் கொழும்பில் கூட்டங்கள் நடைபெற்றன. இக் கூட்டங்களில், அனர்த்த வேலைத்திட்டங்கள் தொடர்பாக, சர்வதேசச் செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட விளக்கங்கள் யாவும் மனிதநேய முயற்சிகளை மேற்கொள்ளும் போது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களை அடைவதில் ஒரு பயனுள்ள நுழைவாயிலாக இனங்காணப்பட்டன.

**ஆலோசனை செயன்முறை**

விளக்கப்படுத்தப்பட்ட நெறிமுறைக் கோட்பாடுகளின் முதலாவது வாசகத்தை CHA, Berghof Foundation, GTZ, UNDP ஆகியவற்றைக கொண்ட குழு தயாரித்தது. சுனாமிக்குப் பின்னரான நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தி ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள முகவர் நிறுவனங்கள் தமது வேலைத்திட்டங்களையும் செயற்பாடுகளையும் வரையும் போதும் முகாமைத்துவம் செய்யும் போதும் இலங்கையின் பின்புலத்தில் கவனத்திற்கொள்ள வேண்டிய அவசியமுள்ள முக்கியமான அம்சங்களை அறிந்திருப்பதை உறுதி செய்யும் மார்க்கத்தில் ஒரு பங்களிப்பாகவே இந்த வாசகம் உருவாக்கப்பட்டது. IFRC/ICRC யின் கோட்பாடுகள் மூன்று கோணங்களில் இருந்து பரிசீலிக்கப்பட்டன:

- இலங்கையின் ஒட்டுமொத்தமான பின்புலத்திற்கு அவற்றின் பொருத்தம்: பிரச்னைகளையும் போக்குகளையும் இனங்காணுதல்:
- சுனாமி அனர்த்தம் தொடர்பில் தோன்றிய அக்கறைகள்:

- சுமாதானத் திசையில் அல்லது புத்துயிர் பெற்ற பதற்றத்துக்குப் பங்களிக்கும் மனிதநேய உதவியின் உள்ளாற்றல்.

இந்த வாசகம், CHA அலுவலகத்தில் 2005ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 9ம் திகதி நடைபெற்ற "சமாதான முயற்சிகள் தொடர்பில் சுனாமிக்குப் பின்னரான இடர்ப்பாடுகள்" பற்றிய பயிற்சிப் பட்டறையில் INGOக்களதும் உள்ளுர் NGOக்களதும் பங்கேற்பாளர் களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்த வாசகத்துக்குச் சேர்ப்புக்களைச் செய்யவும் பங்கேற்பாளர்களுக்கு உற்சாகம் அளிக்கப்பட்டது. மின் அஞ்சல் மூலம் சில கருத்துக்கள் பெறப்பட்டன. இவை, NGO க்களின் கடமைப் பொறுப்புக்கள் பற்றி அவற்றின் கவனத்தை ஈர்ப்பது பயன் தரக் கூடியது, இருப்பினும் கள நிலையில் இந்த நெறி முறைக் கோட்பாட்டின் உணர்வுக்கும் வாசகத்துக்கும் இசைவுபடுவதை உறுதி செய்வதில் மெய்யான பிரச்னைகள் இருந்து வருகின்றன என்பதைப் பரிந்துரைத்தன.

எனவே, CHA-Berghof Foundationன் ஒத்துழைப்பானது நடைமுறைச் செயற்பாட்டாளர் களின் கருத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆலோசனைப் போக்கை மேலும் விஸ்தரித்தது. 2005, பெப்ருவரி மாதம் 13ம் திகதியன்று திருகோணமலையில் நடைபெற்ற "சுனாமிக்குப் பின்னரான வடகிழக்கில் தீங்கு இழைக்காக் கோட்பாடுகளும் முரண்பாட்டுக் கூருணர்வும்" என்ற பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியதன் மூலம் இந்த விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டது. திருத்தப்பட்ட விளக்கங்களைக் கொண்ட ஆவணங்கள் பங்கேற்றோர் அனைவருக்கும் வழங்கப்பட்டன. அரசாங்க, LTTE பிரதிநிதிகளும் NGO க்களும் இருதரப்பு-பலதரப்பு முகவர் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கேற்றனர்.

Berghof Foundationன் ஒத்துழைப்புடன் CHA-திருகோணமலை மாவட்டத்துக்கு 2005, பெப்ருவரி 14 முதல் 19வரை வெளிக்கள விஜயத்தை மேற்கொண்டது. இந்த விஜயத்தின் நோக்கம், விளக்கங்களைக் கொண்ட ஆவணத்தைப் பகிர்ந்து கொள்வதும் உள்ளுர் மற்றும் சர்வதேச நடைமுறைச் செயற்பாட்டாளர்களுடன் ஆலோசனை நடத்துவதும் கள நிலையில் தோன்றுகின்ற பிரச்னைகளை இனங்காண்பதுமாகும். இந்த ஆலோசனைகள் உள்ளுர் மற்றும் சர்வதேச NGOக்கள், இருதரப்பு-பலதரப்பு கொடையாளிகள், புதிதாக வந்துள்ள சர்வதேச NGOக்கள், புதிதாக நிறுவப்பட்டுள்ள உள்ளுர் NGO க்கள், தனியார்த்துறை நிறுவனங்கள், சிறிய அளவிலான தொழிலதிபர்கள் மற்றும் செய்தியாளர்கள் உள்ளிட்ட தனிப்பட்டோர் ஆகியோரை இலக்காகக் கொண்டிருந்தது. தனிப்பட்டவர்கள் பலரையும் சேர்த்து அமைப்புக்களைச் சார்ந்த இருபத்தியிரண்டு பேருடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டன. (தயவு செய்து வழங்கப்பட்டுள்ள பட்டியலைப் பார்க்கவும்).

உள்ளுர், சர்வதேச நடைமுறைச் செயற்பாட்டாளர்கள் விளக்கங்களின் அவசியத்தையும் அவற்றில் தமக்குள்ள ஆர்வத்தையும் ஊர்ஜிதப்படுத்தினார்கள். விளக்கங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழி பற்றி (13.02.2005) இரண்டு பிரச்னைகள் எழுப்பப்பட்டன. சமர்ப்பிக்கப்பட்ட விளக்கங்கள் உள்ளுரில் ஆங்கிலம் பேசும் செயற்பாட்டாளர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குக் கல்விசார் தன்மையைக் கொண்டவை என்று அவர்கள் கூறினர், சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்ப்புக்கள் அவசியம் என்றனர். இறுதியில், இந்த விளக்கங்கள் யாவும் அதிகமாக நடைமுறை நோக்கத்தையும் பால்நிலை சார் கூருணர்வு உள்ளடக்கத்தையும் கொண்டவையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. அதாவது, புதிதாக தோன்றியுள்ள மனிதநேய அமைப்புக்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளிட, உள்ளுர் மற்றும் சர்வதேச நடைமுறைச் செயற்பாட்டாளர்களுக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

CHA, கொழும்பு பல்கலைக்கழகத்தின் வறுமை மற்றும் சமூகக் கொள்கை ஆய்வுக்கான திறனாற்றலை மேம்படுத்தும் வேலைத்திட்டம் (IMACO) மற்றும் Berghof Foundation ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 2005 மே2 முதல்4வரை மற்றுமொரு பயிற்சிப் பட்டறை

யை நடத்தியது. “சுனாமிக்குப் பின்னரான மனிதநேய, மீள் நிர்மாண, அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள NGOக்களின் சமாதானக் கூருணர்வை மேம்படுத்துதல்” என்ற தலைப்பில் மாறாவிலையில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடந்தது. இதன் நோக்கம், சமாதானம்/முரண்பாடு மற்றும் அபிவிருத்திக்கு இடையிலான பிணைப்புகள் பற்றிய புரிந்துணர்வை அதிகரிப்பதும் முரண்பாடுகள் சம்பந்தமான அபிவிருத்தி இடையீடுகளில் நோக்கங்களற்ற தாக்கங்கள் பற்றி பங்கேற்பாளர்களுக்கு உணர்வூட்டுவதும் அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் நடைபெற்று வரும் கருத்திட்டச் செயற்பாடுகளின் தாக்க மதிப்பீட்டில் சமாதானக் கூருணர்வுக்கு ஆதரவு அளிப்பதற்கான வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்துவதும் ஆகும்.

பயிற்சிப் பட்டறையின் இறுதி நாளன்று, பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் முன்னமேயே விநியோகிக்கப்பட்டிருந்த விளக்கங்கள் பற்றி சிறு குழுக்கள் மட்டத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், அவர்களது சொந்தக் கருத்திட்டங்களுக்கு இந்த விளக்கங்கள் பொருந்துகின்ற விதம் பற்றியும் கோட்பாடுகளைப் பிரயோகப்படுத்துவதில் காணப்படும் இடையூறுகள் பற்றியும் ஆராயப்பட்டது. இந்த விளக்கங்களை மேலும் சீராக்குவதற்காக, பங்கேற்பாளர்கள் தமது விமர்சன ரீதியான கருத்துக்களை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டனர். இந்த விளக்கங்கள் முன்னைய பயிற்சிகளில் இருந்ததைப் போலவே, நடைமுறைச் செயற்பாட்டாளர்கள் தமது கள நிலை அனுபவங்களில் சேர்த்துக்கொள்ளக் கூடிய ஒரு சிறந்த கட்டமைப்பை வழங்கின என்பதை இந்தப் பயிற்சிப் பட்டறையின் அனுபவங்கள் நிர்ணயித்துக் காட்டின. இவ்விதம் நெறி முறைக் கோட்பாடுகளின் கோவைக்கு சிறந்த அர்த்தபுஷ்டியைக் கொடுத்தன. குழு நிலைப் பயிற்சிகளின்போது பெறப்பட்ட கருத்துக்களும் விதந்துரைகளும் விளக்கங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

### முன்னுள்ள மார்க்கம்

மேலோங்கி இருக்கும் பிரச்னை என்ற வகையில், சமாதான அபிவிருத்தி இடையீடுகளை, நெறிமுறைக் கோட்பாடுகளின் அடிப்படையில் அல்லது அவற்றின் வழிகாட்டுதலில் நடைமுறைப்படுத்துதல் என்பது, அபிவிருத்திக்கும் அத்தகைய வழிகாட்டுதலின் பகிர்வுக்கும் சமாந்தரமானவையாக இந்த இடையீடுகள் இருந்தால் மாத்திரமே சாதிக்கப்படக் கூடியது என்று ஆலோசனை செயன்முறையின் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டது. அரசு சார்ந்தவையும் அரசு சாராதவையுமான வெவ்வேறு முகவர் நிறுவனங்கள் மத்தியில் காணப்படும் சிறந்தவையும் தீயவையுமான நடைமுறைகளை அவதானித்து அறிக்கை சமர்ப்பிக்க கட்டுப்பாட்டு முறை உருவாக்கப்பட்டு வருகின்றது. ஆயினும், இத்தகைய “கட்டுப்பாட்டு” நிறுவகங்களை அமைப்பது, இறுதியில் அபிவிருத்தி அமைப்புகளின் வேறுபட்ட கடமைப் பொறுப்புக்களை அவசியப்படுத்தும். இது சில வழிகாட்டு நெறிகளுக்கு “இணங்க” வேண்டியிருப்பதுடன் மாத்திரமன்றி, நடைமுறைப்படுத்தல் மட்டத்தில் வேறு விதமான எதார்த்தங்களை அறிவிப்பது தொடர்பில் (எதிர்ச்) செயலில் ஈடுபட வேண்டியுமிருக்கும்.

ஆயினும், IFRC/ICRC வழிகாட்டு நெறிக்கோவையில் காணப்படும் விளக்கங்கள் யாவும் நடைமுறைச் செயற்பாட்டாளர்கள் தமது சுயமான பணிச் சூழலில் இருந்து பெறப்பட்ட உதாரணங்களைக் கொண்டு கலந்துரையாடுவதிலும் அன்றாடக் கருத்திட்டப் பணியில் சகல கோட்பாடுகளையும் நடைமுறைப்படுத்தும் போது அடிக்கடி உருவாகும் சிரமமான கட்டமைவு நிலைமைகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்துக் கொள்வதிலும் பயனுள்ளவையாக இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த உணர்வில், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட விளக்கங்கள் யாவும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆலோசனை செயன்முறையில் இருந்து பெறப்பட்ட பின்கருத்துக்களைக் கொண்டவை. இதை ஒரு செயன்முறையினால் உந்தப்பட்ட ஆவணமாகப் பார்க்க வேண்டும். பல்வேறு பங்காளர்களும் இலங்கையின் பின்புலத்தில் இருந்து பொருத்தமான உதாரணங்களையும் தனித்தன்மைகளையும் சேர்க்க முடியும்.

## நெறிமுறைக் கோட்பாடுகள்

"அனர்த்த விளைவுபடுத்தல் வேலைத் திட்டங்களில் சர்வதேசச் செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம்/சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நெறி முறைக் கோட்பாடுகளை" பின்வரும் இணையத் தளத்தில் காணலாம்.

<http:www.icrc.org/Web/Eng/siteengO.nsf/html/57JMNB/Open Document>சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்த நெறிமுறைக் கோட்பாடுகள், "IFRC/ICRC நெறிமுறைக் கோட்பாடுகள் என்றே குறிப்பிடப்படும். உண்மையான IFRC/ICRC நெறிமுறைக் கோட்பாடுகளைக் கீழே அடைப்பில் கண்டுகொள்ளலாம். இலங்கைக்குப் பொருந்தக்கூடிய, சுனாமிக்குப் பின்னரான சூழமைவைப் பிரதிபலிக்கும் முயற்சிகளில் பத்துக் கோட்பாடுகள் ஒவ்வொன்றின் கீழும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

## IFRC/ICRC நெறிமுறைக் கோட்பாடுகளுக்கான விளக்கங்கள்

**கோட்பாடு இல.1:** மனிதநேயத்தின் இன்றியமையாத் தன்மை தான் முதலாவது அம்சமாகும். மனிதநேய உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் அதை வழங்குவதற்குமான உரிமை ஒரு அடிப்படையான மனிதநேயக் கோட்பாடு ஆகும். இதனைச் சகல நாடுகளின் குடிமக்களும் அனுபவிக்க வேண்டும். சர்வதேசச் சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் மனிதநேய உதவி எங்கு தேவைப்பட்டாலும் அதை வழங்குவதற்கான உரிமையை நாம் அங்கீகரிக்கின்றோம். எனவே, இந்தப் பொறுப்பை மேற்கொள்வதில், பாதிக்கப்பட்ட மக்களைத் தங்குதடையின்றி அணுகுவதற்கான தேவை அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது. அனர்த்த விளைவுபடுத்தலில் எமது தலையாய உந்துதல், அனர்த்தத்தினால் ஏற்பட்ட உளவியல் பாதிப்பைத் தாங்கிக்கொள்ள முடியாமல் உள்ளவர்கள் மத்தியில் மானுடத் துயரத்தைப் போக்குவதாகும். நாம் மனிதநேய உதவியை வழங்கும்போது அது ஒரு பக்கச் சார்பானதாக அல்லது அரசியல் செயற்பாடாக இருப்பதில்லை, அதை அவ்வாறு கருதவும் கூடாது.

> **(பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் மனிதநேய உதவி எங்கு தேவைப்பட்டாலும் அவர்களும் அந்த உதவி மிகையாகத் தேவைப்படுகின்றவர்களும் பக்கச்சார்பு அல்லது அரசியல் தலையீடு இல்லாமல் அதனைப் பெற்றுக்கொள்ளும் உரிமைதான் முதலாவது அம்சமாகும்.**

இலங்கையில், உள்நாட்டு இன-அரசியல் முரண்பாட்டுப் பின்புலத்தில் சுனாமி நிகழ்ந்தது. இந்த முரண்பாடு, கடந்த இருபது ஆண்டுகளாக நாட்டின் சமூக இசைவிணக்கம், பொருளாதாரச் செயற்பாடு ஆகிய இரண்டையுமே சீர்குலைத்தது. சுனாமி அனர்த்தம் வடக்கு, கிழக்கு, தெற்குக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த சமூகங்களை சீரழித்தது. இந்தப் பகுதிகளில், அரசாங்கத்தால் 'விடுவிக்கப்படாத பகுதிகள்' என குறிப்பிடப்படும் எல்.ரீ.ரீ.இயின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களும் அடங்கும்,

சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட, இலங்கையின் சகல சமூகங்களதும் நல்வாழ்வுக்காக மனிதநேய உதவி வழங்கும்போது, 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் நிறுவப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கும் சமாதானத்தை நிலைபெறச் செய்வதும் பேச்சுவார்த்தை மூலம் நீடித்திருக்கக்கூடிய தீர்வுக்காக நடத்தப்படும் தேடலுக்குப் பங்களிப்பதும் இன்றியமையாதது. சுனாமியினால் ஏற்பட்டுள்ள அதியவிய மனிதநேயத் தேவையைச் சமாளிப்பதற்குப் புதிய ஒத்துழைப்பு வடிவங்கள் தேவைப்படுகின்றன என்பதை அரசாங்கமும் எல்.ரீ.ரீ.இ மற்றும் முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் அங்கீகரித்துள்ளன.

- சுனாமியினாலும் உள்நாட்டு மோதலினாலும் பல்வேறு இனக்குழுக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த சில சமூகங்கள் இரண்டு அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளன. மோதலினால் மக்கள் இடம்பெயர்ந்தும் சுனாமியினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டும் முகாம்களில் வாழ்கின்ற சம்பவங்களும் உள்ளன. இதனால் இரட்டை இடம்பெயர்வும் உளவியல் தாக்கமும் ஏற்பட்டன. பிணக்குக்குள்ளான ஆட்சி முறைகள், (உத்தியோகபூர்வமான, உத்தியோகபூர்வமற்ற) ஸ்தல கட்டமைவுகள், சவாலுக்குட்பட்ட நீதி அமைப்புகள், முன்னுணர்ந்து கூறமுடியாத அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல், தன்னிச்சையாகச் சமூகங்களிடையே தோன்றும் குழப்பம், மானிடப் பாதுகாப்புக்குரிய அக்கறைகள் போன்று முரண்பாட்டுக் கட்டமைவு கொண்ட செயன்முறைகள் நிலவி வருகின்றன. வளங்கள் யாவும் செயல் திறனுடன், சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும், பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த பெண்கள், ஆண்களின் தேவைகளுக்கும் அக்கறைகளுக்கும் பயன்தருவதாக இருக்க வேண்டும்.

அதேசமயம், நாடு முழுவதற்கும் அதன் பன்முகக் கலாசாரத்துக்கும் பல்வேறு மக்களினங்களுக்குமான ஓர் உறுதிமிக்க நோக்கினைப் பேணிக்காக்க வேண்டும். பரந்த அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சாரப் பின்னணிக்குப் பால்நிலை சார் சமத்துவம் மையமாக விளங்கும் வகையில் ஊக்குவிக்க வேண்டும்.

நாட்டில் சமாதானம் அல்லது மோதலின் விரிவான இயக்கவியலில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் அனர்த்தத்துக்குப் பின்னரான முயற்சிகளுக்கு உண்டு என்பதை அங்கீகரிப்பது முக்கியமானது. ஊசலாடிக் கொண்ருக்கும் சமாதான நிலைமையில் அனர்த்தத்துக்குப் பின்னரான உதவியானது பொருளாதாரப் பாதுகாப்புடன் கூடிய சமூக இசைவிணக்கப் பிணைப்புக்களை ஊக்குவிக்க வேண்டும், குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும், உள்ளூர் மனித வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். நிவாரணம், புனர்வாழ்வு மீள் நிர்மாண முயற்சிகளை மேற்கொள்ளும் சமகால நிலைமையில், சர்வதேச மனிதநேயச் சட்டத்தையும், உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள நபர்களுக்கான வழிகாட்டுக் கோட்பாடுகளையும் மதிப்பதற்கான தம்முடைய கடமைப்பொறுப்பு, கடப்பாடு ஆகியவற்றைத் தரப்புக்களுக்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

ஒரு பாரபட்சமற்ற சூழல், அச்சுப்படிவமுறையில் அப்படியே பிரதிபண்ணும் சமூக-பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை எதிர்த்து நிற்கின்றது, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரதும் மானுடத் துயரைப் போக்கும் நோக்குடன் அவர்கள் நியாயமானதும் சமதையானதுமான உதவியைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்னு முயற்சிக்கின்றது. எனவே, உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புகள் சகல சமூகங்களையும் கரையோரப் பகுதிகளையும் இடம் பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் முகாம்களையும் சென்றடையக் கூடியதாக இருப்பதைப் பேணிக்காப்பது முக்கியமானதாகும். மேலும். நிவாரணத்தையும் உதவியையும் வழங்குகின்ற ஸ்தாபனங்கள் சமூகங்களால் நம்பப்படுபவையாகவும் உள்ளூராட்சி மற்றும் ஆட்சிக் கட்டமைவுகளாலும் அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகாரமுள்ள மனிதநேய அமைப்புக்களாலும்அங்கீகரிக்கப்பட்டவையாகவும் இருப்பது முக்கியமானது. யாவற்றுக்கும் மேலாக, நிர்வாக வரம்புகள் அல்லது அரசியல் நலன்களால் தேவை மதிப்பீடுகள் கட்டுப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதும் முக்கியமானதாகும்.

**கோட்பாடு இல. 2:** உதவியானது அதைப் பெறுகின்றவர்களின் சாகியம், தேசிய இனம் போன்ற பேதமில்லாமல், எந்தவிதமான பாதகமுள்ள வேறுபாடும் இல்லாமல் வழங்கப்படுகின்றது. தேவையை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு உதவி முன்னுரிமைகள் கணிக்கப்படுகின்றன. சாத்தியமானவிடத்து, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் பற்றிய திட்டவட்டமான மதிப்பீடு, அந்தத் தேவைகளை எதிர்கொள்வதற்காக உள்ளூரில் ஏற்கனவே உள்ள உள்ளாற்றல்கள் ஆகியவற்றையே நிவாரணம் வழங்குவதற்கான ஆதாரமாக நாம் கொள்வோம். எமது முழுமையான வேலைத்திட்டங்களுக்குள், எம்முடைய பரிசீலனைகளைப் பிரதிபலிப்போம். மானுடத் துன்பம் எப்போது தென்பட்டாலும் அதைப் போக்கியாக வேண்டும்: நாட்டின் ஒரு பாகத்தில் இருப்பதைப் போலவே மறு பாகத்திலும் வாழ்க்கை பொன்னானது. இவ்வாறு நாம் வழங்கும் உதவியானது எந்த அளவுக்குத் துயரத்தைப் போக்க விரும்புகின்றது என்பதைப் பிரதிபலிப்பதாக இருக்கும். இந்த அணுகுமுறையை நாம் நடைமுறைப்படுத்தும் போது அனர்த்தத்திற்கு உள்ளாகக் கூடிய சமூகங்களில் பெண்கள் வகிக்கும் பாத்திரத்தை நாம் அங்கீகரிக்கிறோம். எம்முடைய இந்த பாத்திரம் எமது வேலைத்திட்டங்களால் ஆதரிக்கப்படுமே தவிர, மறைந்தொழிந்து விடாது என்பதை நாம் உறுதி செய்வோம். அத்தகைய ஒரு சர்வவியாபகமான, பாரபட்சமில்லாத, சுயாதீனமான கொள்கையை நடைமுறைப்படுத்துவது என்பது, நாமும் நமது பங்காளிகளும் அத்தகைய சமத்துவமான நிவாரணங்களை வழங்குவதற்குத் தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவரையும் சமமான அளவில் அணுகக்கூடியதாகவும் இருந்தால் மாத்திரமே செயலூக்கமுள்ளதாக இருக்கும்.

→ **மனிதநேய உதவியானது தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் தேவைகளை மாத்திரமே ஒரே அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்றது என்பதையும் மனிதநேய உதவி எந்தவிதமான பாரபட்சமும் அல்லது விசேட கவனிப்பும் இல்லாமல் வழங்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துவதே இரண்டாவது கோட்பாட்டின் சிறப்பம்சம். இரண்டாவது கோட்பாடு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக ஏற்கனவே இருந்துவரும் உள்ளூர் உள்ளாற்றல்களை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. இந்த விடயத்தில் பெண்களே இன்றியமையாத செயல்பாட்டாளர்கள். எனவே, எங்கு சாத்தியமோ அங்கெல்லாம் அவர்களின் பங்களிப்பை பலப்படுத்த வேண்டும்.**

பால், வயது, சாதி, இனத்துவம், மத நம்பிக்கை, சமூகப் பொருளாதார அந்தஸ்து அல்லது அரசியல் கருத்துக்கள் போன்ற பேதங்கள் இல்லாமல் சமத்துவமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். பெண்கள், ஆண்களுக்கிடையே கலாசார ரீதியில் வரையறுக்கப்பட்ட பால்நிலை சார் பிரிவினை, வீட்டிற்குள் பௌதீக ரீதியிலான இடவசதி, அல்லது குழந்தைகளைக் கடத்துவதிலிருந்து பாதுகாப்பளிப்பது போன்று அவசியமாகக்கூடிய பால், வயது போன்ற அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு வித்தியாசமான செயற்பாடுகள் சூழ்நிலைக்கேற்றவாறு எடுக்கப்படல் வேண்டும்.

அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதில் பிராந்தியங்களின் தனித்துவமான அம்சங்கள் குறித்து கவனஞ் செலுத்த வேண்டும். மேலும் இந்தப் பின்னணிக்குள் அனர்த்தத்தினால் (அனர்த்தங்களினால்) நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ள சமூகங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். இந்த விஷயத்தில், சர்வதேச அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட, பிரதிநிதித்துவமுள்ள உள்ளூர் பங்காளிகளுடன் இணைந்து செயல்பட வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது. குறிப்பாக, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்கள், முறைசார்ந்த மகளிர் குழுக்கள், உள்ளூர் அரசியல்-நிர்வாகக் கட்டமைப்புக்கள், உள்ளூர் அரசு சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை ஆகியோருடன் இணைந்து செயல்பட வேண்டும்: இலங்கையிலும் அல்லது அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் நீண்டகாலமாகச் செயற்பட்டுவரும் சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கொடை வழங்குவோருடன் கட்டமைவு சார்ந்த பிணைப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.

நாடு முழுவதிலும் அனர்த்தம் ஏற்படுத்திய மானுடத் தாக்கம் பற்றிய கருத்தொற்றுமை அடிப்படையிலான தேவை மதிப்பீட்டைச் செய்வது, இனப்பரம்பல் மற்றும் சமூகப் பொருளாதார தரவு, பால் மற்றும் வயது பற்றி முழுமையாகத் திரட்டப்படாத தகவல்களைப் பெறுவது: பால்நிலை சார் கூருணர்வு குறிகாட்டிகளை விருத்தி செய்வது, சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான பால்நிலை சார் வித்தியாசங்களைப் பகுப்பாய்வு செய்வது: அனர்த்தம் நிகழ்வதையும் அதனுடன் சம்பந்தப்பட்ட இழப்புக்கள் மற்றும் ஆபத்துக்கள், பாதிப்பு ஏற்படும் நிலைமையைக் குறைப்பது ஆகியவற்றை இனங்காண்பது: உடல்சார் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அடிப்படையில் சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கவும் தடுக்கவுமான வாய்ப்புக்களை நிர்ணயிப்பது ஆகியனவும் முக்கியமானவையாகும்.

சுனாமி மற்றும் உள்நாட்டு முரண்பாட்டின் தாக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் பெண்கள் தலைமையிலான குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கின்றன. மருத்துவ, சமூக, பொருளாதாரப் பாதிப்பு ஆபத்தை அதிகரித்திருக்கின்றன: நிவாரண முகாம்களிலும் வீட்டில் இடவசதி காரணமாகவும் பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் கடத்தப்படவும் பாலியல் வன்முறைக்கு உள்ளாகவுமான சந்தர்ப்பங்களை உச்சநிலைக்குக் கொண்டு வந்துள்ளன: சமூகங்களும் தனிப்பட்டவர்களும் குடும்பங்களின் சீர்குலைவைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளன: ஊனமுற்றோர், வெளிநாடு சென்ற தொழிலாளர்கள், இளைஞர்கள், விதவைகள், அநாதைகள் போன்று அனுகூலமற்ற நிலையிலுள்ள இடம் பெயர்ந்தவர்களை ஒதுக்கி வைத்துள்ளன: தமது நலன்களிலும் வளர்ச்சியிலும் அக்கறை காட்டுவதற்குப் பொருத்தமான (கூட்டுக்)குடும்பங்கள் இல்லாத குழந்தைகளை உருவாக்கியுள்ளன.

பல்வேறு இனத்துவ மற்றும் மத நம்பிக்கைகளைக் கொண்ட பெண்கள், ஆண்களின் நடைமுறைத் தேவைகள் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நலன்களை ஆராயும் போது, முரண்பாட்டைத் தொடர்ந்து அநேகமான பெண்கள், ஆண்களின் வாழ்க்கையை மாற்றியமைத்துவரும் மாற்றங்களை அங்கீகரிப்பது இன்றியமையாதது. எல்லா இடங்களிலும் இல்லாவிட்டாலும் அநேகமான பகுதிகளில் உள்நாட்டு மோதல் காரணமாக அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. சமூகங்கள் முழுவதுமே பாரிய அளவிலான குழப்பநிலைக்கு உட்பட்டன, பால்நிலைசார் பங்களிப்புகள் அதிகமான பாதிப்புக்கு உள்ளாகின.

✍

**கோட்பாடு இல. 3:** அரசியல் அல்லது மத நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்காக உதவி பயன்படுத்தப்பட மாட்டாது. தனிப்பட்டவர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் தேவைக்கு ஏற்பவே மனிதாபிமான உதவிகள் வழங்கப்படும். குறிப்பிட்ட அரசியல் அல்லது மதக் கருத்துக்களை ஆதரிக்கும் உரிமை அரசு சார்பற்ற மனிதநேய முகவர் அமைப்புக்கு இருந்தபோதிலும் கூட, உதவியானது, அதைப் பெறுகின்றவர்கள் இக்கருத்துக்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைச் சார்ந்திருக்காது. ஒரு குறிப்பிட்ட அரசியல் அல்லது மதப்பிரிவைத் தழுவுவதுடன் அல்லது ஏற்றுக்கொள்வதுடன் உதவிக்கான உறுதிமொழி, விநியோகம் அல்லது பகிர்ந்து கொள்ளுதலை நாம் இணைக்க மாட்டோம்.

→ **மூன்றாவது கோட்பாட்டின் சிறப்பம்சம் பாரபட்சமின்மையாகும். உதவி விநியோகமானது அதைப் பெறுகின்றவர்களின் குறிப்பிட்ட அரசியல் அல்லது மத நம்பிக்கைகளைச் சார்ந்திருக்காது. அதுபோலவே, உதவி விநியோகமும் அத்தகைய நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் எந்த விதமான நிர்ப்பந்தத்துடனும் இணைக்கப்பட்டதாக இருக்காது.**

IFRC/ICRCயின் மூன்றாவது கோட்பாடானது ஸ்தாபனங்கள், உள்முரண்பாட்டின் கருவிகளாகவோ, தரப்புக்களாகவோ செயல்படாமல் இருப்பதை வேண்டி நிற்கின்றது. ஆனால், துயரத்தின் வியாபிதத்தையும் தேவைகளின் அவசியத்தையும் கணக்கில் எடுத்து, தேவையுள்ள அனைவருக்கும் பாரபட்சமில்லாத விதத்தில் உதவி வழங்க வேண்டும் என்பதை உறுதி செய்ய விழைகின்றது. ஆயுதப் படைகளுக்கு இணையாகப் பணிபுரியும் அமைப்புகளின் நம்பகத் தன்மையானது இராணுவ, சிவிலியன் செயற்பாடுகளுக்கு இடையேயுள்ள வேண்டிய வேறுபாடுகளைக் கருத்திலெடுத்து பாரபட்சமின்மை, நடுநிலைமை பேணப்படுவதை அவசியமாக்குகின்றது.

பாரபட்சமற்ற செயல்பாடானது, குறிப்பாக, இரண்டு தசாப்தங்களாக உள்நாட்டு மோதலை அனுபவித்துள்ள இலங்கையில், சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் உதவி வழங்கும் அமைப்புக்களின் சட்டபூர்வத் தன்மைக்கு இன்றியமையாததாகும். எனவே, உதவியைக் குறிப்பிட்ட அரசியல் அல்லது மத நம்பிக்கைக்யை ஊக்குவிப்பதற்காகப் பயன்படுத்தவே கூடாது: அதனை நிபந்தனையாகவும் கொண்டிருக்கக் கூடாது: ஏனெனில் இவை ஒரு சமூகத்தை அல்லது சமூகக் குழுவைத் தனிமைப்படுத்துவதன் மூலம் பதற்றத்துக்கும் மோதலுக்கும் பங்காற்ற முடியும், இன-அரசியல் அல்லது மத நம்பிக்கை அடிப்படையில் இலங்கை மக்களை மேலும் துண்டாடும் ஆபத்தை உருவாக்க முடியும்.

அனர்த்தத்திற்குப் பின்னரான முயற்சிகள் யாவும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் முழுவதினதும் நம்பிக்கையில் வேரூன்றியிருக்க வேண்டும். ஆண்கள், பெண்கள் ஆகிய இரு தரப்பாரினதும் அக்கறைகள் இனங்காணப்பட்டு. பொருத்தமான விதத்தில் அவற்றைக் கையாள வேண்டும். அவ்வாறு செய்கையில், ஊனமுற்றோர், யுத்தத்தினால் விதவையானோர், வெளிநாடுகளில் தொழில் புரிவோர், இளைஞர்கள், குழந்தைகள் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் ஆகியவற்றையும் கட்டாயம் சேர்த்துக்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பணியாற்றும் பால்நிலை சார் சமநிலையுள்ள குழுக்கள் குறுகிய கால, நீண்டகால மீட்பு மற்றும் மீள் நிர்மாணம் சம்பந்தமான தேவைகள், அக்கறைகள் ஆகியவற்றைச் சரியான முறையில் முன்வைக்க முடியும்.

உதவியானது, உள்ளூர் சமூகங்களுக்குள்ளும் (உள்ளூர் மற்றும் சர்வதேச) அ.சா.நிறுவனம்கள் மற்றும் உள்ளூராட்சிக் கட்டமைப்புகள் மத்தியிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கவும் பாரபட்சத்தை எதிர்த்துப் போராடவும் கலாச்சார வித்தியாசங்களையும் பல்வேறுபட்ட மத நம்பிக்கைகளையும் மதிக்கவும் பாதுகாப்பான சமூகங்களின் அபிவிருத்தியில் மகளிரைப் பூரணமான, சமத்துவமுள்ள பங்காளிகளாக்கவும் அனர்த்தத்திற்குப் பின்னரான முயற்சிகளில் உள்ளூர் மற்றும் தேசிய முதன்மைகளை நிர்ணயிப்பதிலும் சமூகங்கள் ஒன்றினைந்து செயல்படுவதை அனுமதிக்கும் பொறியமைவுகளுக்கு ஆதரவு அளிக்கப்பட வேண்டும்.

மத நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட அ.சா.நிறுவனம்றுவனங்களின், குறிப்பாக, வெளி மார்க்கங்களின் மூலம் நிதியிடப்படுகின்றவற்றின் உள்ளூர்க் கருத்துணர்வுகள், அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இதற்குக் காரணம் இத்தகைய அமைப்புகள் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட, சமுதாய ரீதியிலும் அல்லது நாடு தழுவிய அடிப்படையிலும் ஸ்திரமற்ற தன்மை ஏற்படலாம் என்ற அச்சத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதேயாகும்: மேலும் சில விஷயங்கள், குறிப்பிட்ட இனக் கலாச்சாரத்துடனும் அல்லது மதக் குழுக்களுடனும் ஒத்துவராதவை என நோக்கப்படுகின்றது. மத விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள், சம்பந்தப்பட்ட மத நம்பிக்கையைக் கொண்ட நபர்களை மாத்திரமே கவனிக்கின்றன அல்லது, அது மாத்திரமன்றி, வறுமை மற்றும் அது தொடர்பான பிரச்னைகளில் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய பொருளாதார ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் சீர்குலைவான மதமாற்றத்தைச் செய்வதில் ஈடுபடுகின்றன என்று பொதுவாகவே நம்பப்படுகின்றது. மேலும், குறிப்பிட்ட மதத்தில் முறையான விதத்தில் இணைந்து கொண்டவர்களுக்கு மாத்திரமே தொடர்ச்சியான ஆதரவும் சிறந்த ஆதரவும் வழங்கப்படுகின்றன என்ற சந்தேகமும் உள்ளது.

எனவே, சகல முன்முயற்சிகளும் பெண்கள், ஆண்களின் அக்கறைகளையும் இனத்துவம், மத நம்பிக்கை ஆகியவற்றையும் பொறியமைவுகள் உள்ளடக்கியதாக இருப்பதைச் நிச்சயமாய் உறுதி செய்ய வேண்டும். மேலும் சகல முன்முயற்சிகளும் இலங்கையின் நீண்டகால பால்நிலை சார்ந்த கூருணர்வு, அமைதிபூர்வ, மற்றும் நீடித்திருக்கக்கூடிய அபிவிருத்தியை உறுதி செய்வனவாக இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யும் மேலோங்கிய நோக்கத்தைக் கவனத்திற் கொண்டிருக்க வேண்டும்.

**கோட்பாடு இல.4:** நாம், அரசினுடைய வெளிநாட்டுக் கொள்கையின் கருவிகளாகச் செயல்படாமல் இருப்பதற்கு முயற்சிப்போம். NHGA க்கள் அரசாங்கங்களிடமிருந்து சுயாதீனமாகச் செயல்படுகின்ற முகவர் அமைப்புக்கள். எனவே, நாம் எமது சொந்தக் கொள்கைகளை வகுத்து மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துகின்றோம். எம்முடைய சொந்த சுயாதீனமான கொள்கைக்கு இணங்காதவிடத்து எந்தவொரு அரசாங்கத்தினது கொள்கையையும் நடைமுறைப்படுத்த நாம் விழைய மாட்டோம். கண்டிப்பாகவே, அரசாங்கங்களுக்கும் அல்லது ஏனைய உறுப்பினர்களுக்கும் மனிதநேயமல்லாத ஏனைய நோக்கங்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் அரசியல், இராணுவ அல்லது பொருளாதாரக் கூருணர்வு இயல்புள்ள தகவல்களைத் திரட்டுவதற்கு நாம் தெரிந்தோ, அல்லது கவனயீனமாகவோ எம்மையும் அல்லது எமது ஊழியர்களையும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம், அதுபோலவே, கொடை வழங்கும் அரசாங்கங்களது வெளிநாட்டுக் கொள்கைக்குக் கருவிகளாகவோ நாம் செயல்படவும் மாட்டோம். நாம் பெறுகின்ற உதவியைத் தேவைகளுக்குப் பயன்படுத்துவோம்: மேலும் இந்த உதவி கொடை வழங்குவோரின் பொருட்களின் மிகையை அகற்றுவதற்கான அவசியத்தினாலோ, குறிப்பிட்ட எந்தவொரு கொடையாளியின் அரசியல் நலன்களினாலோ உந்தப்பட்டதாக இருக்காது. எமது பணிக்கு ஆதரவளிக்கும் சம்பந்தப்பட்ட தனிநபர்கள் சுயவிருப்பத்துடன் வழங்குகின்ற உழைப்பையும் நிதிகளையும் நாம் மதிப்பதுடன் அதனை வரவேற்கின்றோம். அத்துடன், அத்தகைய சுயவிருப்ப உந்துதல் மூலம் ஊக்குவிக்கப்படு கின்ற சுயாதீனமான செயல்பாட்டை நாம் அங்கீககரிக்கின்றோம். எமது சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்காக நிதியுதவி வழங்கும் ஒரே மார்க்கத்தில் சார்ந்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ள விழைவோம்.

→ **நான்காவது கோட்பாட்டின் சிறப்பம்சம், திட்டவட்டமான பொருளாதார அல்லது அரசியல் ஆதரவு வழங்குவதில் கொடையாளிகளான அரசாங்கங்களுக்கு கருவிகளாகச் செயல்படாமல் இருப்பது அல்லது அவற்றுக்காக அரசியல் ரீதியில் அல்லது இராணுவக் கூருணர்வுள்ள தகவல்களைச் திரட்டும் கருவிகளாக இல்லாமல் இருப்பது ஆகும். கொடை வழங்குவோர் மீது சார்ந்திருப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்காகத் தமது பணிகளுக்கென யாரிடம் இருந்து, எந்த நிபந்தனையில் தாம் உதவிகளைப் பெறுகின்றோம் என்பதை அமைப்புகள் தீர்க்கமான முறையில் பிரதிபலிப்பதை நான்காவது கோட்பாடு வலியுறுத்துகின்றது.**

அனர்த்த நிலைமைகளில், அரசு சார்பற்ற அமைப்புகள் முற்றிலும் தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் தேவைகளை ஈடு செய்யும் சுயாதீனமான கொள்கைகளை உயர்த்திப் பிடித்து மூலோபாயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும் உதவியானது தேவைப்படுகின்ற அனைவருக்கும் சமமான அளவில் பங்கிடப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்துவது இன்றியமையாதது. இலங்கையின் தற்போதைய நிலைமையானது, மனிதநேயப் பாதுகாப்பும் உதவியும் தேவைப்படுகின்ற அனைவருக்கும் விரைவாகவும் விட்டுக்கொடுக்கும் தன்மையுடனும் அவற்றை வழங்குவதற்கான முயற்சிகள் ஒன்றிணைக்கப்படுவதைத் தேவைப்படுத்துகின்றது.

சுனாமிக்குப் பின்னரான சூழமைவில், இந்தத் துறை நிர்வகித்து வரும் பெருந்தொகை நிதியுடன் இரண்டறக் கலந்து, உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சார்பற்ற அமைப்புகளின் எண்ணிக்கை, செலுத்தப்படக் கூடிய செல்வாக்கு ஆகிய இரண்டினதும் தனித்தனி அம்சங்களின் வளர்ச்சியானது நாட்டில் புதிய சவால்கள் பலவற்றை தோற்றுவித்துள்ளது.

சுனாமிக்குப் பின்னரான சூழமைவு, உள்ளூரில் பல்வேறு வகையான அடிமட்ட மற்றும் நிவாரணத்தை நோக்கமாகக் கொண்ட அரசு சார்பற்ற அமைப்புகள் உருவாக்கப்படுவதைக் கண்ணுற்றது. சில அமைப்புக்கள் சர்வதேச சமூகத்திடம் இருந்து அனர்த்த நிவாரண நிதிகளைப் பறிக்கின்ற மற்றும் கறக்கின்ற நோக்கங்களுக்காகவே அமைக்கப்பட்டவை யாகத் தோன்றுகின்றது. ஏனையோார் உண்மையிலேயே மனித நேய நோங்கங்களைக் கொண்டவையாக இருக்கலாம். புதிதாக நிறுவப்பட்டுள்ள உள்ளூர் அ.சா. நிகளின் ஆற்றல், பதிலளிக்கும் தன்மை, அபிவிருத்தியில் நீடித்திருக்கும் தன்மை ஆகியவற்றையும் குறிப்பாக வெளிநாட்டு அ.சா.நிறுவனம்களுடன் பங்காளித்துவம் கொள்ளும் போது அவற்றின் கொள்கைள் மற்றும் நடைமுறைப்படுத்தல் மூலோபாயங்களுடன் இணைத்து அவற்றின் நடவடிக்கைகளையும் மீளாய்வு செய்வது முக்கியமானதாகும். இதன் மூலம்,சர்வதேச அ.சா.நிறுவனம்களின் தெளிவாகப் புலப்படக்கூடிய நோக்கங்களுக்கு உள்ளூர் அ.நா.நி.கள் மீளளிப்பு செய்யவேண்டிய நிலை உருவாகின்றது: குறுகியகால வெளியுதவி மீது சார்ந்திருப்பவையாக அவை மாறுகின்றன: கொடையாளியின் முன்னுரிமைகளையும் கொடையாளியின் நிபந்தனைகளையும் மாற்றுவதற்கும் அவை உட்படுகின்றன: இதன் விளைவால் ஏற்கனவே தத்தளித்துக் கொண்டிருக்கும் உள்ளூர் அ.சா.நிறுவனம்றுவனங்களுக்கு சவால்களை அதிகரிக்கும்.

சுனாமிக்குப் பின்னரான சூழமைவானது நன்றாக வேரூன்றியுள்ள அ.சா.நிறுவனங்கள், தம்முடைய ஸ்தாபன ரீதியான ஆணை அதிகாரங்களையும் நிறுவன ரீதியான குறிக்கோள்களையும் சுனாமியை மையமாகக் கொண்டதாக மாற்றுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையிலுள்ள அ.சா.நிறுவனம் துறை, உள்ளக ஆற்றல்கள் அறவேயில்லாத அல்லது மிகக் குறைவாக உள்ள நிலையில் நிவாரண நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் மார்க்கத்தில் மிகையதிகமாக மாறுவதையும் கண்டிருக்கின்றது. புனர்வாழ்வு, நிலையான அபிவிருத்தி தொடர்பான பன்முகப்பட்ட, எண்ணற்ற விஷயங்கள் ஆகவும் சிக்கலான நிபுணத்துவத் துறையைச் சார்ந்தவையாகும். பொருத்தமான நிபுணத்துவம் இல்லாதவர்களாலும் ஸ்தாபனங்களாலும் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் குறுகிய கால, இடைக்கால, நீண்ட கால சமூக, பொருளாதார மற்றும் சமாதான விடயங்கள் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துவதில் முடிவடையக்கூடும்.

முரண்பாட்டில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட தரப்புடன் ஒத்திசையும் வகையிலான எந்தவித உதவியாலும் எற்படக்கூடிய ஆபத்துக்களை அங்கீகரிப்பதும் அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு, மதத்தை அடிப்படையாகக் கொண்ட அல்லது அரசியல் குழுவுக்கு வழங்கப்படும் உதவியை இனங்காணும் உள்ளூர் கருத்துணர்வுகளை அ.சா.நிறுவனங்கள் அறிந்திருப்பதால் உள்ளூர் முரண்பாட்டின் ஒரு குறிப்பிட்ட தரப்பை வலுப்படுத்துவதற்காக வெளிப்படையாகவும் மறைமாகவும் ஆதரவளிப்பதால் நேரக்கூடிய ஆபத்துக்களை அங்கீகரிப்பதும் அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட குழுவுக்குப் பிரத்தியேகமாய் உதவி வழங்குவதாக முன்முயற்சிகள் (தோன்றினாலும்) ஒரு சிலருக்குக் குறுகிய கால அடிப்படையில் நிவாரணத்தைத் தரக்கூடும் ஆனால், இது, மானுடப் பாதுகாப்பு சம்பந்தமாக உள்ளூர் தரப்பு நேரடியாக அல்லது முழுமையாக/உள்ளூரில் அல்லது நாடுதழுவிய அளவில் நீண்டகாலப் பாதிப்புக்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடும்.

✍

**கோட்பாடு 5**: நாம் கலாச்சாரம், பழக்க வழக்கங்களை மதிப்போம். நாம் பணியாற்றுகின்ற சமூகங்களதும் நாடுகளதும் கலாசாரம், கட்டமைவுகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்க நாம் முயற்சிப்போம்.

→ **ஐந்தாவது கோட்பாட்டின் சிறப்பம்சம் கலாச்சார ரீதியான கூருணர்வும் மனிதநேய உதவி வழங்கப்படும் மார்க்கத்தில் உள்ளூர் பழக்க வழக்கங்களுக்கும் கட்டமைவுகளுக்குமான மரியாதையைத் தொடர்ச்சியாகப் பிரயோகிப்பதற்கு இணங்குவதும் ஆகும்.**

IFRC/ICRC யின் ஐந்தாவது கோட்பாடு சகல மத நம்பிக்கைகள், இனக் குழுக்களின் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், மொழிகள் ஆகியவற்றுக்கு மரியாதையையும் சகிப்புத் தன்மையையும் அவசியப்படுத்துகின்றது. தற்போதைய இன-அரசியல் முரண்பாட்டின் விளைவால் மத நம்பிக்கை மற்றும் இனத்துவம் சம்பந்தமான அக்கறைகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கூருணர்வுடையவையாக மாறியுள்ளன. இலங்கையின் பின்புலத்தில் மத நம்பிக்கை, இனத்துவம், பால்நிலை சார்புப் பிரச்னைகள் சிக்கலான, சமூகரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இயக்கவியலாக்கியுள்ளன: தனித்துவத்தின் கட்டமைவுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

சுனாமிக்குப் பிற்பட்ட காலத்தில் மதநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட அ.நா.நிறுவனங்கள் பெருமளவில் தோன்றின. இது, முரண்பாடு மற்றும் சமூக அரசியல் ஸதிரத்தன்மை மீது ஆபத்துக்களை ஏற்படுத்தக்கக்கூடிய வாய்ப்பைத் தரலாம். எனவே, மதங்களுக்கிடையிலான சம்பாஷணையை ஊக்குவிப்பதும் வெளிப்படைப்பண்பு மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய நடைமுறைகளைப் பேணிக்காப்பதும் ஸ்தாபனங்களையும் அவற்றின் நடவடிக்கைகளையும் சுற்றிச் சூழ்ந்துள்ள இரகசியம் பற்றிய சந்தேகங்களை அகற்றுவதும் இவ்வாறு பொது மக்கள் மத்தியில் சந்தேகங்கள் வித்திடப்படுவதைத் தவிர்ப்பதும் முக்கியமாகும். எந்தவொரு குறிப்பிட்ட மத நம்பிக்கை அடிப்படையில் செயல்படும் அ.சா.நிறுவனம்களும் மற்றுமொரு மதத்தைச் சேர்ந்த சமூகத்தவர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் மதத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டடங்களை அமைக்காமல் இருப்பது போன்ற மேலும் குறிப்பிடத்தக்க முன்னெச்சரிக்கைகளை எடுக்கவேண்டும்.

சில சமயங்களில் மனிதநேய முயற்சிகள் பால்நிலைசார் பாத்திரங்கள் மற்றும் உறவுகள் தொடர்பான பாரம்பரிய விளக்கங்களின் அடிப்படையில் உள்ளன. எல்லா ஆண்களும் எல்லாப் பெண்களும் அனர்த்தத்தினால் ஒரே மாதிரியாகப் பாதிக்கப்படவில்லை என்று வலியுறுத்துவது முக்கியமானது, எனவே, சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கு ஏற்ற திட்டவட்டமான ஆய்வு தேவைப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட இனக்குழு தனது சிறுபான்மை நிலை காரணமாக ஓரங்கட்டப்படலாம். எனவே, அ.சா.நிறுவனம்றுவனங்களின் இடையீடுகள், உதவி வழங்கப்படும் பகுதியில் (பகுதிகளில்) உள்ள சகல சமூகங்களையும் சேர்ந்த உள்ளூர் ஆண்களும் பெண்களும் தெரிவிக்கும் அக்கறைகள், முதன்மைகள் ஆகியவற்றைப் பிரதிபலிப்பது அவசியமாகும்.

நாட்டின் உள்நாட்டு முரண்பாடானது மோதலின் இயக்கவியலைக் கொண்ட ஆயுதக் கலாச்சாரத்திற்குப் பங்களித்துள்ளது, குறிப்பாக, இது குறிப்பிட்ட சமூகங்கள் அல்லது இனக் குழுக்களுடன் சம்பந்தப்பட்ட பால்நிலை சார் உறவுகள் மற்றும் தனித்துவங்களின் அடிப்படையில் சமூகக் கட்டமைவைப் பாதித்திருக்கின்றது என்பதைத் தெரிந்திருப்பதும் அவசியமாகும். பால்நிலை சார் பகுப்பாய்வு மற்றும் மனித உரிமைகளின் தரங்களை உள்ளடக்குவதுடன் யுத்தத்தின் அரசியலை மதிப்பீடு செய்வது தீர்க்கமானது .பெண்ணிலைவாதம், ஆணிலைவாதம் தொடர்பான அக்கறைகள் மூலம் சமுதாயங்கள் இராணுவமயமாக்கப்படும் அம்சங்களையும் குடும்பம், இனத்துவம், மத நம்பிக்கை, அங்கவீனம் பற்றிய கோட்பாடுகளையும் சமூகப் பொறுப்புணர்வுப் பிரச்னைகளையும் கருத்திற் கொள்வது இன்றியமையாதது.

இலங்கையில் இரண்டு தசாப்தங்களாக நிகழ்ந்துவரும் ஆயுத மோதலில் பெண்கள் அடிக்கடி புத்தம் புதிய பாத்திரங்களை ஏற்றுள்ளனர், அவர்களில் சிலர் போராளிகளாக, வருமானம் சம்பாதிக்கும் மூலவர்களாக, குடும்பத்திற்குத் தலைமை ஏற்பவர்களாக விளங்குகின்றனர். 'பாரம்பரியமான' பால்நிலை சார் உறவுகள் என அழைக்கப்படும் பொறிமுறைகள் தீவிர மாற்றம் பெற்றுள்ளன. எனவே பெண்கள் மீது அனர்த்தங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை மதிப்பீடு செய்வது அளப்பரிய முக்கியத்துவம் வாய்ந்தது, குறிப்பாக, ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னரான சூழமைவில், பெண்களுக்கு அதிகாரமளிக்கும் பிரச்னைகள் பற்றியும் முரண்பாட்டின் பின்னணியில் பெண்களைச் சுனாமி எவ்வாறு பாதிக்கின்றது, சமாதான காலத்தில் பெண்களை எவ்வாறு உள்வாங்கப்படுகின்றார்கள், போராளிகள் மற்றும் இராணுவ ஆளணிகள் சமூகங்களுக்குத் திரும்புவது ஆகியன பற்றியும் கவனம் செலுத்துவது பொருத்தமானது.

இவை தவிர, ஏனைய கலாச்சாரக் கூருணர்வு அக்கறைகளும் உள்ளன. அவையாவன, ஆங்கில மொழியைப் புரிந்து கொள்வது தொடர்பில் உள்ளூர்ப் பங்காளிகளை ஒதுக்கி வைக்கும் வாய்ப்பு, உள்ளூரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களைப் பெற்றுக்கொள்வது, உள்ளூர் மொழிகள் தொடர்பில் தரப்படுத்தப்பட்ட மொழிபெயர்ப்பு களுக்கான சொற்பதத் தொகுப்பைப் பெறுவது போன்றவையாகும்.

✍

**கோட்பாடு இல.6:** உள்ளூர் உள்ளாற்றல்கள் மீது அனர்த்த மீளளிப்பை நாம் கட்டியெழுப்ப முயல்வோம். சகல மக்களும் சமூகங்களும் - அனர்த்தங்களிலும் கூட-- ஆற்றல்களையும் அது போலவே நலிவுற்ற தன்மைகளையும் பெற்றுள்ளனர். சாத்தியமானவிடத்து, உள்ளூர் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வது, உள்ளூர் பொருள்களைக் கொள்வனவு செய்வது, உள்ளூர் வர்த்தக நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்வது ஆகியன மூலம் இந்த ஆற்றல்களை வலுப்படுத்துவோம். திட்டடமிடலிலும் நடைமுறைப்படுத்தலிலும் பங்காளிகள் என்ற வகையில் உள்ளூர் அ.சா.ம. அமைப்புக்களுடன் சாத்தியமானவிடத்தில் எல்லாம் நாம் அவற்றின் மூலமாகச் செயல்படுவோம், எங்கெல்லாம் பொருத்தமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் நாம் உள்ளூராட்சிக் கட்டமைப்புக்களுடன் ஒத்துழைப்போம். எமது அவசரகால நிவாரணங்கள் பற்றி சரியான ஒழுங்கமைப்பு குறித்து உயர் முன்னுரிமையைக் கொடுப்போம். நிவாரண நடவடிக்கைகளில் பெரும்பாலும் நேரடியாகவே சம்பந்தப்பட்டுள்ள நாடுகளுக்குள் இது சிறப்பாகச் சாத்தியமாகும், மேலும் பொருத்தமான ஐ.நா. உறுப்புக்களின் பிரதிநிதிகள் இதில் உள்ளடக்கப்பட வேண்டும்.

→ **ஆறாவது கோட்பாட்டின் சிறப்பம்சம், அனர்த்த மீளளிப்புக்களுக்கான உள்ளூர் உள்ளாற்றல்களை அங்கீகரிப்பது. மனிதநேய உதவியானது சாத்தியமான இடத்தில் எல்லாம் அத்தகைய உள்ளாற்றல்களை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். இதனை அடைவதற்காக, உள்ளூர் அ.சா.நிறுவனம்க்களுடனும் உள்ளூர் அரசாங்கக் கட்டமைவுகளுடனும் நெருங்கிய ஒத்துழைப்பும் வெவ்வேறு உதவி முகவர் நிறுவனங்களுக்கிடையிலான சரியான ஒருங்கிணைப்புப் பொறியமைப்பும் உருவாக்கப்பட்டு பேணிக்காக்கப்பட வேண்டும்.**

இலங்கையில் மறுவாழ்வு மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் ஓர் ஒஜங்கிணைக்கப்பட்ட விதத்தில் இருப்பதையும் நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய ஆற்றலைக்

கட்டியெழுப்புவதற்கு ஆதரவு அளிக்கும் நோக்கமுடைய கட்டமைப்புக்களையும் ஆறாவது IFRC/ICRC கோட்பாடு அவசியப்படுத்துகின்றது: இது, இலங்கைக்குள்ளும் இலங்கைக்கும் அதன் சர்வதேசப் பங்காளிகளுக்கும் இடையேயும் புதிய பதற்றங்களின் இடர் நிலைகளைக் குறைப்பதன் மூலம் சமாதானம், அபிவிருத்திக்கான புதிய சந்தர்ப்பங்களைப் பூரண அனுகூலமாக எடுத்துக் கொள்கின்றது,

மனிதநேய இடையீடுகள் பாதிக்கப்பட்ட ஆண்கள், பெண்களதும் உள்ளூர் அ.சா.நிறுவனம்களதும் (திட்ட உத்தியோகத்தர் உள்ளிட) ஆற்றலைக் கட்டியெழுப்பவும் அதிகாரமளிக்கவும் முயன்றாக வேண்டும், உள்ளடங்கிய சமூகவாழக்கையை ஊக்குவிக்க வேண்டும், உதவிக்குரிய விதத்தில் சிவில் சமுதாயப் பங்காளிகள் மற்றும் ஆட்சிக் கட்டமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கிடையே கொள்கை சம்பந்தமான சம்பாஷணையை வலுப்படுத்தவும் கேந்திர முக்கியத்துவமுள்ள கூட்டணிகளை உருவாக்கவும் முயன்றாக வேண்டும்.

சர்வதேச முகவர் நிறுவனங்களின் பிரசன்னமானது, உள்ளூர் சமூகங்களும் ஸ்தாபனங்களும் நிறுவனங்களும் தம்முடைய மீளுகைக்காக தம்முடைய சொந்த ஆற்றல்களையும் வளங்களையும் முதலீடு செய்வதிலிருந்து உற்சாகம் இழக்கச் செய்வதாக இருக்கக்கூடாது. மக்களின் வாழ்வாதாரத்தின் பாதுகாப்பையும் சுற்றாடல் முகாமைத்துவத்தையும் மேம்படுத்தும் பொருட்டு உள்ளூர் கட்டமைவுகளை ஈடுபாடு கொள்ளச் செய்வது, அதனை வியாபிப்பது, உள்ளூரில்செறிந்து காணப்படும் ஆற்றல், அனுபவங்கள், அறிவு, தேர்ச்சித் திறன்கள் ஆகியவற்றைக் கண்டறியும் மார்க்கங்கள் பற்றி உள்ளூர் மட்டத்தில் ஆற்றல் மதிப்பீடு செய்வது மிகவும் முக்கியமானது.

உதவியை வழங்கும் அவசரத்தில் தர நிர்ணயங்களைக் கவனிக்காமல் இருக்கவும் முடியாது, மீளுகைப் போக்கில் ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தின் நிலைப்பாட்டைப் பேணிக்காக்கவும் முடியாது. அதுபோலவே, மனிதநேய நிதிகளும் முன்முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மீண்டும் செய்ததையே செய்து விரயமாக்காமல் இருப்பதையும் குறிப்பிட்ட துறைகள் மிதமிஞ்சிப் போகாமல் இருப்பதையும நாடும் அ.சா.நிறுவனம்க்களும் உறுதிப்படுத்த வேண்டும். உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் கிடைக்கும் மனிதநேய உதவிகள், நிபுணத்துவத்தின் அளவைக் கவனமில்லாமல் நாட்டின் சமாதானம் மற்றும் நிலையானதன்மை ஆகியவற்றுடன் சமரசம் கொள்கின்ற கருத்திட்டங்களுக்குத் தவறாகச் செலவு செய்கின்ற, துஷ்பிரயோகம் செய்கின்ற ஆபத்துக்களும் உள்ளன. இவை மற்றுமொரு அனர்த்தத்தைத் தூண்டும் ஆபத்துக்களும் உள்ளன.

அசா.நிறுவனங்கள்,சமூக-அடிப்படையிலான அமைப்புக்கள், உள்ளூர் தனியார்த்துறையினர், ஆட்சிக் கட்டமைவுகள், இருதரப்பு-பலதரப்புக் கொடையாளிகள் ஆகியோருக்கிடையேயும் அவர்களுடனேயும் ஆக்கபூர்வமான பங்காளித்துவங்களை முன்னெடுப்பதில் நாட்டின் நீண்டகால அடிப்படையில் மக்களை மையமாகக் கொண்ட அபிவிருத்தியை நிபுணத்துவ மனிதநேய முயற்சிகள் மூலம் ஆதரிக்க வேண்டும். ஆயினும் அ.சா.நிறுவனங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேசப் பங்காளிகளுக்கு இடையிலான நிதி வழங்கும் உறவுகளின் எதார்த்தங்கள் விஷயத்தில் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

இலங்கையில் செயல்பட்டுவரும்அ.சா.நிறுவனம்றுவனங்களின் எண்ணிக்கை, அவை நிர்வகித்துவரும் நிதி ஆகியவற்றின் அதிகரிப்பு என்பன அ.சா.நிறுவனம் துறையின் பங்குப்பணியும் அதன் செல்வாக்கும் அதிகரித்து வருவரதைச் சுட்டிக்காட்டுகிறது. அ.சா.நிறுவனம் துறையின் (உள்ளூர் மற்றும் சர்வதேச) கணிசமான வளர்ச்சியும் புதிதாகச் செயவ்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பும் எந்த அளவுக்குத் தன்னிறைவைக் கொண்டு வருகின்றன, நீடித்திருக்கும ் அபிவிருத்தியையும் ஊட்டி வளர்க்கின்றன, அல்லது வெளிநாட்டு வளங்கள் மீது தங்கியிருப்பதன் அடிப்படையில் சார்புநிலைக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கின்றன என்பதும் பாரிய அக்கறைக்குரிய விஷயமாகும்.

மறுவாழ்வுப் போக்கில் பங்கேற்கும் தனிப்பட்ட தனிநபர்களின் பிரசன்னமும் உள்ளது. இவர்கள் இத்தகைய வெளிப்படையான முயற்சியில் காலடி எடுத்து வைத்துள்ளனர். இந்தப் புதிய செயல்பாட்டாளர்களில் தனிப்பட்ட இலங்கைப் பிரஜைகளும் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தவர்களும் வெளிநாடுகளில்இருந்துவரும் பயணிகளும் அடங்குவர். இவர்கள்குறிபிபடக்கூடிய வகையில் அமைப்புகளைச் சார்ந்தவர்களோ, எந்தவொரு மனிதநேய அமைப்புகளுடன் சம்பந்தப்பட்டவர்களோ அல்ல. ஆனால், கரையோரப் பகுதிகளையே இவர்கயள் தமது கவன மையமாகக் கொண்டு செயல்படுகின்றனர். மறுவாழவளிக்குதம் போக்கில் இந்தச் செயல்பாட்டாளர்கள் (தனிநபர்கள் மற்றும் அ.சா.நிறுவனம்க்கள்), அவர்களது முறைசார்ந்த நோக்கங்கள் என்ன, அல்லது அவர்களது கொள்கைகளும் நடைமுறைப்படுத்ததல் மூலோபாயங்கள் யாவை, அவர்கள் எவ்வகை உதவியை வழங்க எண்ணியுள்ளனர், எவ்வளவு காலம்அவர்கள் இங்கு இருக்கப் போகின்றார்கள், மறுவாழ்வளிக்கும் தொழிநுட்ப, நிறுவக உள்ளாற்றல்கள் இவர்களிடம் உண்டா, அப்படி என்றால், அவர்கள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களைக் கடைப்பிடிக்க உத்தேசித்துள்ளார்களா அல்லது உள்ளூர் கூட்டிணைப்புப் பொறியமைவுகளுடன் இணைந்து செயல்பட விரும்புகின்றார்களா என்பது தெரியவில்லை.

சம்பளக் கட்டமைப்பு சம்பந்தமான பிரச்னைகளில் அ.சா.நிறுவனம்க்கள், சம சந்தர்ப்பங்களையும் பால்நிலை சார் சமத்துவத்தையும் ஊக்குவிக்கும் தரங்களை விருத்தி செய்து அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். உள்ளூர் வழங்களுடன் கூடிய தேர்ச்சித்திறன்களைக் கவனத்திற்கொண்டு உள்ளூர் உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்தும் நிபந்தனைகள், தொழிலாளர் சந்தைக்கு விளைவுகாட்டச் செய்வதாகவும் அரசாங்கத்தின் தொழிற்சட்டங்களுக்கு இசைவானதாகவும் இருக்கும் வகையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இது, முக்கியமாக உள்ளூர் அ.சா.நிறுவனம்க்களைச் சேர்ந்த உள்ளூர் உத்தியோகத்தர்களை சர்வதேச அ.சா.நிறுவனங்கள் குறுகியகால அடிப்படையில் வேலைக்கு அமர்த்துவதில் ஈடுபடுவதை உற்சாகம் இழக்கச் செய்யும். இவ்வாறு அவர்களை வேலைக்கு அமர்த்துவதால் நாட்டில் உள்ளூர் அ.சா.நிறுவனம் துறையின் நிலைத்திருக்கும் தன்மை, செயல்திறனுள்ள விநியோகம் ஆகியவற்றின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

சர்வதேச அ.சா.நிறுவனம்க்கள், குறிப்பாக உள்ளூர் பங்காளிகளின் அறிவாற்றலையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்த ஆக்கபூர்வமான வழிவகைகளைக் காணவேண்டும். அத்துடன் உள்ளூர் உத்தியோகத்தர்களாகும் வாய்ப்புள்ளவர்களுக்கு தேவைப்படும் சமயத்தில் பயிற்சி வழங்க வேண்டும். இதில், பகுப்பாய்வு ம்றறும் நடைமுறைத் தேர்ச்சிகள், மத்தியஸ்தம் மற்றும் மறுவாழ்வு, சமாதானம், முரண்பாட்டுப்பகுப்பாய்வு, குடியிருப்பு சுகாதாரம், பாலியல் சமத்துவம், விவசாயம் போன்று மனிதநேய, அபிவிருத்தி பிரச்னைகளும் உள்ளடங்கும். புங்காளித்துவ நிகழ்வுப்போக்கு பற்றிய மதிப்பீடானது, அ.சா.நிறுவனங்கள் ஒன்றிணைந்து கற்றுக்கொள்ளவும் உள்ளூர் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பையும் சிறந்த நடைமுறைகளையும் உருவாக்குவதற்கான புதிய வடிவங்கள், முறைகளுக்கு வாய்ப்பேற்படுத்தும்.

தேர்ச்சிபெற்ற உள்ளூர் தொழலாளர்களை இழக்கக்கூடிய பாதகமான தாகக்கங்களைக் குறைப்பதற்கும், இலங்கையில் நிலைத்திருக்கக்கூடிய, சுயாதீனமான, இயக்காற்றல்மிக்க, உடனேயே செயல்படுகின்ற உன்ளூர் அ.சா.நிறுவனம்க்களுக்குரிய நிலைமைகளைச் சாத்தியமான அளவு மேம்படத்துவதற்கும் உள்ளூர் மனிதவள அபிவிருத்தியை வலுப்படுத்துகின்ற மூலோபாயங்களை அ.சா.நிறுவனங்கள் உருவாக்க வேண்டும். எனவே, குறிப்பாக, சர்வதேச அ.சா.நிறுவனங்கள் உள்ளூர் முன்முயற்சிகளை அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக, அவற்றை வலுப்படுத்துவதற்கு வாய்ப்பேற்படுத்துவது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஈடுபாட்டின் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ளூர் திறனைக் கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பளிக்கும் பங்குப்பணியில், சகல நிவாரண, மறுவாழ்வு அமைப்புக்களும் படிப்படியாக வளங்களைத் திரட்டுதல், நிதியைப் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் கருத்திட்டச் சுற்றுவட்ட இணைப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

**கோட்பாடு இல.7:** நிவாரண உதவியை முகாமைத்துவம் செய்யும் போது வேலைத்திட்டப் பயனாளிகளையும் அதில் ஈடுபடுத்தும் வழிவகைகள் காணப்பட வேண்டும். அனர்த்த நிவாரண உதவியானது ஒருபோதும் பயனாளிகள் மீது திணிக்கப்படக்கூடாது. உதவி வேலைத்திட்டத்தை வடிவமைப்பதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் உத்தேச பயனாளிகள் சம்பந்தப்படுகையில் நிவாரணத்தைச் செயல்திறன்மிக்க விதத்தில் மேற்கொள்ளமுடியும், மறுவாழ்வுப்பணி நீடித்திருப்பதைச் சிறப்பாக அடைய முடியும். எம்முடைய நிவாரண, மறுவாழ்வு வேலைத்திட்டங்களில் பூரணமான சமூகப் பங்கேற்பைச் சாதிப்பதற்கு நாம் முயல்வோம்.

→ **நிவாரண வேலைத்திட்டத்தின் எல்லாக் கட்டங்களிலும் பயனாளிகளுடன் கலந்தாலோசிப்பதும் அவர்களின் ஈடுபாடும் மனிதநேய உதவியை வரையறுத்து.முாமைத்துவம் செய்து நடைமுறைப்படுத்துவதில் சமூகத்தின் முழுமையான பங்கேற்பை உறுதி செய்வதுமே ஏழாவது கோட்பாட்டின் சிறப்பம்சமாகும்.**

IFRC/ICRCயின் ஏழாவது கோட்பாடானது நடுத்தர மற்றும் நீண்டகால மறுவாழ்வு, அபிவிருத்தி முயற்சிகளைத் திட்டமிடும் போக்கில் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களான பாதிக்கப்பட்ட பெண்களும் ஆண்களும் ஈடுபடுத்தப்படுவதை அவசியப்படுத்துகின்றது. மனிதநேய உதவியை வழங்கவும் விநியோகிக்கவுமான அதியவசரத் தன்மையானது, பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்த பெண்களும் ஆண்களும் அவர்கள் வாழ்கின்ற சமூகங்களில் பங்கேற்பதை அல்லது ஆணையிடப்பட்ட ஆளுமைகளை அவமதிப்பதாக இருக்கக்கூடாது.

பங்கேற்பானது, ஏற்கப்பட்ட முறைகள் உள்ளூர் சமூகங்களை, குறிப்பாக, நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களை உதவி முகாமைத்துவத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் மதிப்பீட்டிலும் முழுமையாகச் சம்பந்தப்படுத்துவதை அவசியப்படுத்துகின்றது. எனவே, அனர்த்தத்தின் முன்னரும் அனர்த்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் பெண்களதும் ஆண்களதும் அனுபவங்களை ஆவணப்படுத்துவதும் பகுப்பாய்வு செய்வதும் மனிதநேய முன்முயற்சிகளுக்கு மையமாக விளங்குகின்றன. முயற்சிகளைவரையறை செய்வதிலும் செயல்படுத்துவதிலும் சகல சமூகங்களைச் சேர்ந்தவர்களும் முழுமையாகக் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். நிலைத்திருக்கக்கூடியதும் அமைதி பூர்வமானதுமான அபிவிருத்தியில் உதவி இடையீடுகளின் விரிவான தாக்கத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட, இடம் பெயர்ந்த சமூகங்களுக்கு உதவுவதும் உதவியளிப்பதும், களத்தில் அடிக்கடி காணப்படும் சிக்கலான நிலவரம், நாட்டின் உள் மோதலின் பின்னணிக்குள் இடம் பெயர்ந்த மக்களதும் அவர்களை விருந்தோம்புகின்றவர்களதும் இன-அரசியல், கலாச்சாரத் தன்மைகள் பற்றிய புரிந்துணர்வில் வேரூன்றியவையாக இருக்க வேண்டும். இடம் பெயர்ந்தவர்களும் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களும் நடத்தப்படுகின்ற விதமானது, விருந்தோம்பு கின்றவர்களுக்கும் புதிதாக வந்தவர்களுக்கும் இடையிலான உறவுகளில் அளப்பரிய தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும். பன்முகத்தன்மையின் பிரசன்னமானது சாதகமாகப் பயன்படுத்தப்படலாம் அல்லது முரண்பாட்டை அதிகரிக்கப் பயன்படுத்தப்படலாம்.

மனிதநேய உதவியை வரையறுப்பதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் தெளிவான, கலந்தாலோசிக்கும் போக்கிற்கான அவசியம் இருக்கின்றது: இது எந்தவொரு முன்முயற்சியிலும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட

பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், குழந்தைகளின் பங்களிப்பை மையத்தில் வைக்கின்றது. சமூகங்களுடன் கிரமமான முறையில் மேற்கொள்ளப்படும் கலந்தாலோசனை மூலம் வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்தும் மார்க்கத்தில் அ.சா.நிறுவனங்கள் பாரபட்சமற்ற சூழலை உருவாக்க முடியும்.

உள்ளார்ந்த, பாரபட்சமற்ற விதத்தில் உள்ளூர் பங்காளிகளின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்கு கூட்டாக, அல்லது பெண்களை மாத்திரம், இளைஞர்-சிறார்கள் மாத்திரம் போன்ற விசேடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களாக ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுவது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்: இது, பங்கேற்பை அதிகரிக்க முடியும், சமூகத்தின் தனித்தனிக் குழுக்கள் குரலெழுப்ப வழிவகுக்க முடியும், பால்சார்ந்ததும் அல்லது வயது சார்ந்தததுமான திட்டவட்ட அக்கறைகளை அடையாளங்காண உதவ முடியும்.

உள்ளூர் முன்முயற்சிகள், அரசாங்கத்தினால் நிலைநிறுத்தப்பட்டுள்ள பரவலான வரம்புக்குள் ஆதரிக்கப்பட வேண்டும். அரசியல் கட்சிகள், உள்ளூர் அ.சா.நிறுவனங்கள், தனியார் துறையினர் மற்றும் சர்வதேசச் சமூகத்தைச் சேர்ந்த பங்காளிகளின் முழுமையான பங்கேற்புக்கு இடமளிக்கும் விரிவான கலந்தாலோசனைகள் மூலம் உள்ளூர் முன்முயற்சிகள் ஆதரிக்கப்பட வேண்டும். அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் உள்ளூர் அ.சா.நிறுவனம்க்கள், அரசாங்க அதிகாரிகள், இருதரப்பு-பலதரப்புக் கொடையாளிகள், சர்வதேச அ.சா.நிறுவனம்க்கள், ஏனைய பங்காளர்கள் சம்பந்தப்படும் பல கலாச்சாரங்களைக் கொண்ட உரையாடல்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

மனிதநேய முயற்சிகளைச் செயல்திறனுடன் திட்டமிடவும் நடைமுறைப்படுத்தவும் அவசியமான முன்னுரிமைத் தேவைகளை இனங்காண்பதில் தகவல்களைத் திரட்டுவதும் அவற்றைப் வழங்குவதும் பகிர்ந்து கொள்வதும் மையமானவை. பங்காளர்கள் அனைவருக்கும் தகவல்களை அளிப்பது செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையைத் தருகின்றது, ஒரே செயலை மீண்டும் செய்வதைத் தவிர்க்கின்றது. ஏனையோருடன் இணைந்து பணியாற்றும்போது உள்ளூர் தகவல்கள், அனுபவங்களை ஒன்றுகுவிப்பதும் சர்வதேசரீதியில் மிகச்சிறந்த நடைமுறைகளாகும். மக்களின் தேவைகள், அக்கறைகள், தெரிவுகளைப் பகுப்பாய்வு செய்து இனங்காணவும் ஆகவும் ஓரங்கட்டப்பட்டுள்ள, பெண்கள், பெண் குழந்தைகள போன்றவர்களின் கருத்துக்களைக் கேட்டு, ஆதரவு வழங்கி, அவர்களின் குரலைப் பிரதிபலித்து அவர்களது நலன்களை உறுதி செய்யவும் பெண்கள். மகளிர் குழுக்கள் மற்றும் அமைப்புகள் உள்ளிட சகல பங்காளர்களதும் முழுமையான ஈடுபாட்டை அ.சா.நிறுவனங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

**கோட்பாடு இல. 8:** நிவாரண உதவி, எதிர்காலத்தில் அனர்த்தங்களால் ஏற்படக்கூடிய இடர்நிலைகளைக் குறைப்பதற்கும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் முயல வேண்டும். நிவாரணச் செயற்பாடுகள் அனைத்தும், நீண்டகால அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைச் சாதகமான அல்லது பாதகமான விதத்தில் பாதிக்கின்றன. இதனை அங்கீககரிக்கும் நாம், எதிர்காலத்தில் நிகழக்கூடிய அனர்த்தங்களினால் பயனாளிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புத் தன்மையைத் தீவிரமாகக் குறைப்பதும் நிலைத்திருக்கக்கூடிய வாழக்கை முறைகளை உருவாக்குவதுமான நிவாரண வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் முயற்சி செய்வோம். முகாமைத்துவம் செய்வதிலும் சுற்றாடல் அக்கறைகளுக்கும் குறிப்பிடத்தக்க கவனத்தை நாம் செலுத்துவோம். மனிதநேய உதவியின் எதிர்மறைத் தாக்கத்தைக் குறைப்பதற்கு முயற்சிப்போம், பயனாளிகள் நீண்ட காலத்துக்கு வெளியுதவியில் சார்ந்திருப்பதைத் தவிர்க்க விழைவோம்.

→ **எட்டாவது கோட்பாட்டின் சிறப்பம்சம், வருங்கால இடர்நிலைகளைக் குறைப்பதும் நிலையான வாழ்வாதாரத்துக்கு ஆதரவு நல்குவதும் சுற்றாடலைப் பாதுகாப்பதும் வெளிநாட்டு உதவி மீது நீண்டகாலத்துக்குச் சார்ந்திருப்பதைத் தவிர்ப்பதுமான மனிதநேய உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நீண்டகால அபிவிருத்திக் குறிக்கோள்களைப் பின்பற்றுவதாகும்.**

எட்டாவது IFRC/ICRC கோட்பாடு, பாதிக்கப்பட்ட சமூகங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேலாக, வருங்கால இடர்நிலைகளைக் குறைப்பதற்கு உதவுவதை அங்கீகரிக்கின்றது. மிகவும் துரிதமான, சமமான வளர்ச்சி மூலம் வறுமையைக் குறைப்பது, சிறந்த நீடித்த நிலையான சுற்றாடல் தன்மையை உருவாக்குவது, உள்ளாந்த உள்ளூர் ஆளுமையை ஊக்குவிப்பது ஆகியவற்றை அனுமதிக்கும் பொருத்தமான, புதிய அபிவிருத்தி அணுகுமுறைகளை இலங்கை கண்டறிய வேண்டும்.

அவ்வாறு செய்கையில், அனர்த்தங்களில் இருந்து தப்பிப்பிழைத்தோர், வெறுமனே பாதிக்கப்பட்டவர்கள் அல்ல: ஆனால், அனர்த்தத்துக்கு (அனர்த்தங்களுக்கு) நிவாரணம் வழங்குவதிலும் வாழ்வாதரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் உயிர்ப்பான பங்கை வகிக்கின்றனர்(வகித்தனர்) என்பதை அங்கீககரிப்பது முக்கியமானதாகும். உள்ளூர் பங்காளிகள்- அனர்த்தத்தில் (அனர்த்தங்களில் தப்பிப் பிழைத்த பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், குழந்தைகள் மூலம் இனங்காணப்பட்ட தேவைகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வளங்கள் மேலும் செயற்திறனுடனும் திறமையுடனும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கவேண்டிய தேவை உள்ளது.

நேரடியாகப் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் ஆகவும் இடர்நிலையிலுள்ள சமூகக் குழுக்களின் ஆற்றல்களை வலுப்படுத்தி, ஆதரவளிப்பதே முன்முயற்சிகளின் நோக்கமாக இருக்க வேண்டும்: அவர்கள் திரும்பிச் சென்று,தமது வாழ்வாதாரங்களையும் இல்லங்களையும் மீண்டும் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். ஒட்டுமொத்தமான கூட்டு நோக்கைப் பேணும் அதேசமயம், இடர்நிலையிலுள்ள குழுக்கள் தமது சொந்தத் தேவைகளை நிர்ணயிப்பதற்குச் சந்தர்ப்பத்தை உருவாக்குவதன் மூலம் இந்த வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

மீனவ சமூகங்கள் மீது கவனம் செலுத்தும் போது, அது மீன்பிடித்தலுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல் இருப்பது இன்றியமையாதது. மீன் பிடித்தல் என்பது ஆண்களின் ஆதிக்கம் நிலவும் தொழில். மீனைப் பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் ஆகியவற்றிலும் மீன்பிடிக் கருவிகள், மற்றும் சாதனங்களைப் பெறுதல், நிர்மாணித்தல், பராமரித்தல் ஆகியவற்றிலும் மீனவ சமூகம் தங்கியுள்ளது. பெண்களும் ஆண்களும் இளைஞர்களும் இத்தகைய செயற்பாடுகளில் பங்கேற்கின்றனர். எனவே மீனைப் பிடிப்பது, வள்ளங்களை வழங்குவது ஆகியவற்றுக்கு மாத்திரமன்றி, பெண்கள் முக்கிய பங்கை வகிக்கும் பதப்படுத்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ள மீனவ சமூகங்களின் இயக்காற்றல் முறைக்கும் உதவி வழங்கப்பட வேண்டும்.

கரையோரத்தைச் சேர்ந்த சமூகங்களில் உள்ள எல்லா ஆண்களும் பெண்களும் மீனவர்கள் அல்ல என்பதை அறிந்திருப்பது முக்கியமானது. தோழில்களை உருவாக்குவதும் வேலைவாய்ப்பளிப்பதும் முழுமையாகவே, நிலையான ஜீவனோபாயத்துக்கு வாய்ப்பளிப்பதில் மைய அக்கறையாக விளங்குகின்றது. எனவே.இவ் விஷயத்தைத் தையல், உணவுப்பதனிடல் போன்ற பாரம்பர்யமான தொழில்களில் பெண்களுக்குப் புதிய தேர்ச்சிகளை வழங்கக்கூடிய பெண்ணியமான வருவாய்-உற்பவிக்கும் திட்டங்களுக்குக் குறைத்து விடக்கூடாது, மாறாக, ஆண்களுக்குச் சமாந்தரமாகப் பெண்கள் மீளளிப்புப பயிற்சி மற்றும் வளங்களை அணுகும் வாய்ப்புக்குக் கவனஞ் செலுத்துவதும் உறுதிப்படுத்துவதும் முக்கியமானது. தையல் மற்றும் உணவுப் பதனிடல் போன்ற வகையிலான செயற்பாடுகள், வழமையாகவே உழைப்பை வேண்டி நிற்பவை,குறைந்த

வருவாயைத் தருபவை. மேலும், இவை வளர்ச்சிக்கோ, கணிசமான அளவு பெருப்பித்தலுக்கோ, வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கோ வாய்ப்பளிப்பதில்லை.

வீடுகளை வழங்கும்போது, இது தொடர்பான முன்முயற்சிகள், இயற்கையான தீங்குகளைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்கின்ற பொருத்தமான கட்டடத்தரங்களை விருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். இதனால், குடும்பங்களும் சமூகங்களும் இயற்கை அனர்த்தங்களின் ஆகக்கூடிய ஆபத்துக்களுக்கு ஆளாகாமல் இருக்கும். மீண்டும் வீட்டுவசதி தேவைப்படும் பெண்களும் ஆண்களும் அத்தகைய கட்டடங்களை வடிவமைப்பதிலும் நிர்மாணிப்பதிலும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்கான உரித்துக்களில் பெண்கள்,ஆண்கள் ஆகிய இருசாராரினதும் பெயர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். எல்லாப் பெண்களுமே ஆண்களுடன் வாழவில்லை, எல்லாப் பெண்களுமே பொருளாதார ரீதியில் சார்ந்திருப்பவர்கள் அல்ல என்பதால் பெண்களுக்கான காணி உரிமைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். பெண்கள் நுகர்வோர்களாகவும் தொழில் முயற்சியாளர் களாகவும் உற்பத்தியாளர்களாகவும் சமூகப் பணியாளர்களாகவும் தொழில்சார் நிபுணர்களாகவும் **இல்லத்துக்கு உணவளிக்கும் உழைப்பாளிகளாகவும்** விளங்குகின்றனர்.

அனர்த்தத்திற்கு (அனர்த்தங்களுக்கு)ப் பின்னர் வீதிகள், நீர்வடிகால்கள், வீட்டுவசதி, பாடசாலைகள் போன்ற பௌதீக உட்கட்டமைப்புகளை நிர்மாணிப்பது சமூகக் கட்டமைப்பு நிர்மாணப் பிரச்னைகளுடன் இணைக்கப்பட வேண்டும். சமூக, பௌதீக கட்டமைப்புப் பிரச்னைகளை ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவையாகவும் ஒருங்கிணைந்த விதத்திலும் அணுகா விட்டால் வெளி உதவி மீது நீண்டகாலத்துக்குச் சார்ந்திருக்கின்ற நிலைமை சுலபமாகத் தோன்றக்கூடும்.

வரட்சி, வெள்ளப் பெருக்கு, மண்சரிவு ஆகியன அடிக்கடி நிகழ்வது, அவற்றின் செறிவுத்தன்மை, அவை ஏற்படுத்திய பாதிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இலங்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்துவரும் போக்கைக் கண்டுள்ளது. உள்ளூர் பங்காளிகள் முன்னர் வரைந்த திட்டங்கள், அனர்த்தத்திற்குப் பிற்பட்ட சூழமைவிற்கு ஏற்ப பரிசீலனை செய்யப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, மாற்றியமைக்கப்பட வேண்டும். முன்முயற்சிகள் யாவும் அனர்த்தங்களுக்கு மீளளிப்புச் செய்வதற்கான எல்லா சமூகங்களதும் ஆற்றல் திறனை உயர்த்த வேண்டும்.

தற்போது, மறுவாழ்வு மற்றும் அபிவிருத்திப் போக்கில் உண்மையான தேவைகள் பற்றிய போதியளவு தகவலும் அறிவும் இல்லாத நிலையில் அநேக அமைப்புக்கள் உதவியைத் திட்டமிட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வது கவலை தருவதாகும். திட்டவட்டமான பால்நிலை சார் பிரச்னைகள் பற்றியும, கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், உடல்-உள அங்கவீனமுற்றவர்கள், முறையான மருத்துவக் கவனிப்பு தேவைப்படும் விசேட மருத்துவத் தேவையுள்ளவர்கள் போன்று சமூகத்திற்குள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்கள் போன்றோர் பற்றியும் கிடைக்கக்கூடிய தகவல்களில் உள்ள குறைபாட்டைப் போக்குவதற்கு உடனடி கவனமும் அதியவசர நடவடிக்கயையும் அவசியமாகின்றன.

பால்நிலை சார் பங்களிப்புகளும் உறவுகளும் எவ்வாறு மாறுகின்றன என்பதைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், பால்நிலை சார் சமத்துவத்தை ஊக்குவிப்பதுடன் அனர்த்தத்திற்குப் பின்னரான சமூகங்களில் நிலையான அபிவிருத்திக் குறிக்கோளையும் அர்த்தபுஷ்டியான சமாதானத்தையும் அடைய முடியும். அனர்த்த ஆபத்து முகாமைத்துவம், பெண்களையும் ஆண்களையும் சம அடிப்படையில் சம்பந்தப்படுத்தி சமாதானத்தைக் கட்டியெழுப்புவது ஆகியவற்றின் செயல்திறனை மேம்படுத்த வேண்டும். எனவே, இதன் பொருட்டு, அனர்த்தத்திற்குப் பின்னரான பொருத்தமான சகல முயற்சிகளையும் வரையறை செய்யும் கட்டத்தில், பால்நிலை சார் பகுப்பாய்வையும் சுற்றாடல் தீங்குகள் மற்றும் பாதிப்புத் தன்மைகளை வரைகின்ற முறைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முகாம்களில் பெண்களின் -- உடல், உள ரீதியான – பாதுகாப்பு பற்றிய அக்கறைகளும் முக்கிய பங்கை வகிக்க வேண்டும். பெண்கள், உள்நாட்டு மோதலால் பாதிக்கப்பட்டும் சுனாமியில் தப்பிப்பிழைத்தும் உள்ளனர்.ஆனால், இதற்கு மேலாக, அவர்கள் தம்முடைய தனிப்பட்ட விதத்திலும், வாழ்விடங்களிலும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். இந்தப் பிரச்னைகளைக் கையாளவிட்டால் அவற்றின் எதிர் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாக இருக்க முடியும். அல்லது பெண்களின் மனிதப் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளின் மிகமோசமான மீறல்களை உள்ளடக்கியிருக்கும்.

உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களின் முகாம்களிலும் தற்காலிக வீடுகளிலும் வாழ்கின்ற பெண்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு எதிரான வன்முறைகளும் பால்நிலை சார்ந்த குறிப்பிடக்கூடிய சுகாதாரப் பிரச்னைகளும் அதிகரித்திருக்கின்றன. முகாம்களில் இராணுவத்தின் பிரசன்னமும் முகாம்களில் உள்ளட இடம் பெயர்ந்த ஆண்கள் மது அருந்துவதும் பெண்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன. ஏனெனில், இவை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்ற உடல்-உளத் துஷ்பிரயோகங்கள் நிகழ்வது, குடும்பத்திலுள்ள ஆண்களாலும் இராணுவத்தினராலும் பாலியல் வல்லுறவு மற்றும் தாக்குதல்கள் இடம் பெறுவது போன்ற ஆபத்துக்களை மிகமோசமாக அதிகரிக்கின்றன. அதிகரித்த மது பாவனையும் துஷ்பிரயோகமும் இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் உள்ள ஆண்களின் பயனுள்ள உழைப்பு மற்றும் வழமையான சமூக, குடும்பக் கடமைப் பொறுப்புக்கள் ஆகியவற்றுக்கான வாய்ப்புக்களை இழப்பதற்கு காரணமாக அமைந்துள்ளன. பாதுகாப்பு ஒழுங்குகள் மூலம் பெண்களைப் பாதுகாக்கவும் பெண்களின் அக்கறைகள் பிரச்னைகளைப் பாதுகாப்பான சூழலில் வெளிப்படுத்துவதற்கு உரிய அரங்குகளை நிறுவுவதற்கும் முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் பெண்களையும் ஆண்களையும் பயனள்ள நிறைவான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது போன்ற தடுப்புப் பொறிமுறைகளை நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாக வேண்டும்.

மீளுகை செயன்முறையில், பெண்களின் பங்கேற்பு மற்றும் தலைமைத்துவத்துக்கான அர்த்தபுஷ்டியான சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும்: தொழில்சார் நிபுணத்துவமுள்ள பெண்களையும் (கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், அவசரகால முகாமையாளர்கள்), அனர்த்த முகாமைத்துவம்,சமாதானம், பரிந்துரை, மனித உரிமைகள்,சுற்றாடல் போன்றவை தொடர்பான பெண்களின் சமூக அமைப்புக்களையும் ஒன்றிணைப்பதற்குக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

உள்ளூர் சந்தை நடைமுறை மீதும் தனியார்துறை மீதும் அனர்த்தங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும், இவை பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயாந்தவர்கள் நாடு முழுவதிலுமுள்ள வறிய சமூகத்தினர் ஆகியோர் மீது கொண்டுள்ள பரவலான விளைவுகளையும் கருத்திற்கொள்வது முக்கியமானதாகும். நிவாரண முகவர் அமைப்புக்களின் பாரிய அளவிலான உணவு விநியோக முயற்சிகள் காரணமாக அரிசி, பருப்பு, பாண் போன்றவற்றின் சந்தை விலைகள் இலங்கையில் அதிகரித்துள்ளன. பௌதீக உட்கட்டமைப்புக்களை நிர்மாணிக்கும் பொருட்களின் விலைகளும் உயர்ந்தன. இதன்விளைவால், நாட்டில் சமூகங்களின் வாழ்வாதாரங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

அரசியல், பொருளாதார, சமூக அபிவிருத்திக்கான கட்டமைப்பை முகாமைத்துவம் செய்வது சாதாரண பணியல்ல. நாட்டின் அபிவிருத்தித் திட்டம்(திட்டங்கள்), இலங்கையின் ஒட்டுமொத்தமான அபிவிருத்திப் போக்கின் பிரச்சினைகள், சமாதானத்தைக் கட்டியெழுப்புவது, பால்நிலை சார் சமத்துவத்தை ஊக்குவிப்பது ஆகியவற்றை உன்னிப்பாகக் கவனத்திற் கொள்ளாமல் மறுவாழ்வையும் அபிவிருத்தியையும் அணுகுவதானது, இடைப்பட்ட காலத்திலும் நீண்ட காலத்திலும் முரண்பாடுகளும் பதற்றங்களும் அதிகரிப்பதற்கும் வறுமை பெருகுவதற்கும் வழிவகுக்கின்றது. அனைத்து வேலைத்திட்ட வடிவமைப்புக்கும், மதிப்பீட்டுக்கும், அறிக்கை சமர்ப்பித்தலுக்கும் செயல்திறனும் நிலையான முன்னெடுப்புகளும் முக்கியமாக விளங்க வேண்டும். முன்னுரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும், ஒருங்கிணைக்கப்பட்ட வகையில்

பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவினதும் அமுல்படுத்தலும் அமைதியான வகையில் தெளிவுபடுத்த வேண்டும்.

சமூகங்களின் உடனடித் தேவைகளை நிவர்த்திப்பதற்காக உதவியைப் பகிர்ந்தளிக்கும் நிர்ப்பந்தங்கள், ஆலோசனை மற்றும் மானியம் பற்றிய கோட்பாடுகளை விட மேலோங்கி இருப்பதாகத் தோன்றுகின்றது. இது உள்ளூரின் தங்கியிருக்கும் தன்மை, மற்றும் அதிகாரஅளிக்காமல் இருப்பது போன்றவற்றின் ஆபத்தை அதிகரிக்கின்றது.

சுனாமி அனர்த்தத்திற்கு முன்னர் சிறப்பான நடைமுறைகளை உருவாக்கியுள்ள அனுபவம் பெற்ற அமைப்புக்கள் வீடுகளையும் சமூக ஆதனங்களையும் மீண்டும் நிர்மாணிப்பதற்கான நிலைத்திருக்கக் கூடிய அணுகுமுறைகளை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதில் ஏனையோருக்கு உதவமுடியும்.

✍

**கோட்பாடு இல. 9:** நாம் யாரிடமிருந்து உதவியை நாடுகின்றேமோ அவர்களுக்கும் நாம் எவரிடமிருந்து வளங்களை ஏற்றுக்கொள்கின்றோமோ அவர்களுக்கும் நாமே பதிலளிக்வேண்டிய பொறுப்புடையவர்கள் என்பதை நாம் மனதில் கொண்டுள்ளோம். அனர்த்தங்களின் போது உதவியளிக்க விரும்புகின்றவர்களுக்கும் உதவி தேவைப் படுகின்றவர்களுக்கும் இடையிலான பங்காளித்துவத்தில் ஒரு நிறுவன ரீதியான இணைப்பாக நாம் அடிக்கடி செயல்படுகின்றோம். எனவே, நாமே இருதரப்பாருக்கும் பதிலளிக்வேண்டிய பொறுப்புடையவர்கள் என்று உறுதியாகக் கருதுகின்றோம். கொடையாளிகள், பயனாளிகள் ஆகியோருடனான எமது செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மை, பகிரங்கத்தன்மை அணுகுமுறை ஆகியவற்றை பிரதிபலிக்கும். நிதியடிப்படையிலும், செயற்திறன் அடிப்படையிலும், அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டிய தேவையை நாம் உணர்ந்துள்ளோம். உதவி பகிர்ந்தளிப்புகள் அனைத்தையும பொருத்தமான விதத்தில் கண்காணிப்பது, அனர்த்த உதவியின் தாக்கம் பற்றிய முறையான மதிப்பீடுகளை மேற்கொள்வது ஆகியவற்றை உறுதி செய்வதற்கான கடமைப் பொறுப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். எமது பணியின் தாக்கம் பற்றியும் அந்தத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அல்லது அதிகரிக்கின்ற காரணிகள் பற்றியும் வெளிப்படையான முறையில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நாம் முன்வருவோம். பெறுமதிமிக்க வளங்களை விரயமாக்காமல் இருக்கும் பொருட்டு எம்முடைய வேலைத்திட்டங்கள் யாவும் உயர்ந்த தொழில்சார் நிபுணத்துவத்தையும் தேர்ச்சித் திறமையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

→ **ஒன்பதாவது கோட்பாட்டின் சிறப்பம்சமானது கொடையாளிகளுடனும் பயனாளிகளுடனும் செயற்டுகையில் பதிலளிக்கும் பொறுப்பும் வெளிப்படைத் தன்மையும் திறந்த தன்மையும் நிதிகள் மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமாக வெளிப்படையாகவே அறிக்கை செய்வதும் மனிதநேய உதவியை முறையாக அவதானிப்பதற்கும் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்வதற்குமான அவசியமும் ஆகும்.**

ஒன்பதாவது கோட்பாடானது, அ.சா.நிறுவனங்கள் தாம் நேரடியாக உதவுகின்ற மக்களுக்கும் தாம் நிதியைப் பெறுகின்ற அமைப்புக்களுக்கும் தாமே வகை சொல்ல வேண்டிய பொறுப்பை அவசியப்படுத்துகின்றது. அ.சா.நிறுவனம்க்கள், தாம் உதவ விழைகின்ற மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவே கோருகின்றன. ஆயினும், பொதுவாகவே தனிப்பட்ட அ.சா.நிறுவனங்கள் தமது நிதி வளங்களை எந்த

நிதி வழங்கும் அமைப்பிலிருந்து பெறுகின்றன என்பதிலேயே பதிலளிக்கும் பொறுப்பு சார்ந்துள்ளது. IFRC/ICRC யின் ஒன்பதாவது கோட்பாடானது, மனிதநேய உதவி தேவைப்படுகின்ற பெண்களையும் ஆண்களையும் குழந்தைகளையும் சமூகங்களையும் மனிதநேய சேவைகளைப் பெறுகின்றவர்களாக மாத்திரம் பார்க்கக்கூடாது, மாறாக,அ.சா.நிறுவனங்கள் நேரடியாகப் பொறுப்பு சொல்லக்கூடிய தரப்புக்களாகவும் பார்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

இலங்கையில் உள்நாட்டு மோதலும் சமூகப் பதற்றங்களும் (மறைமுகமானவையும், புலனாகின்றவையும்) நாட்டில் அ.சா.நிறுவனம்றுவனங்களின் நடவடிக்கைகள் சம்பந்தமான பிச்னைகளைத் தோற்றுவித்துள்ளன. அத்தகைய பிரச்னைகள் நம்பிக்கை, கலாச்சாரப் பொருத்தப்பாடு, இன-அரசியல் விவகாரங்கள், நவ ஏகாதிபத்தியம் என அழைக்கப்படும் கருத்தியல்கள் பற்றியவையாகும். சில விடயங்களில் அ.சா.நிறுவனம் துறையானது அபிவிருத்தி மற்றும் நல்லாட்சிப் போக்குகளில் சட்டபூர்வமான செயல்பாட்டாளர்கள் என்பதற்கு மாறாக, அரசாங்கம் மற்றும் ஆட்சி அதிகாரங்களுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே நோக்கப்படுகின்றது. எனவே, இலங்கையைப் பொறுத்தளவில், அ.சா.நிறுவனம்களின் நம்பகத்தன்மையானது மிகப்பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதைக் கவனத்திற் கொள்ளாவிட்டால், நாட்டின் உள்ளூர் சமூகங்களுக்கும் உள்ளூர் அ.சா.நிறுவனம்களுக்கும் தள்ளாடிக் கொண்டிருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கும் அது இடைக்கால மற்றும் நீண்டகாலத் தீங்கினை ஏற்படுத்தமுடியும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில், பதிலளிக்கும் பொறுப்பை நடைமுறைப்படுத்துவது உள்ளூர் அ.சா.நிறுவனம் களின் சட்டபூர்வத் தன்மையை நிலைநிறுத்துவதில் சக்தி வாய்ந்ததாக விளங்குகின்றது. உள்ளூர் மக்கள், சமூகங்கள், உள்ளூர் அமைப்புக்கள், உள்ளூர் கட்டமைப்புகள் ஆகியவற்றுக்கு அதிகாரமளிக்கும் உள்ளார்ந்த, வெளிப்படையான பொறியமைவுகள் உள்ளூர் நம்பகத்தன்மையை வளர்க்கும் கருவிகளாகும். இது சம்பந்தமாக, அ.சா.நிறுவனங்கள் மூன்று முக்கியமான துறைகளில் பதிலளிக்கும் பொறுப்புக்கான தெளிவான நடைமுறைகளை வகுக்க முடியும்.

- முதலாவதாக, அசாநிகள்,அமைப்பின் பெறுமானங்கள் சம்பந்தமாக வெளிப்படைத் தன்மையை நிர்ணயித்துக்காட்ட வேண்டும். நிறுவனம் கடைப்பிடிக்கும் நெறி(கள்) முறைக் கோட்பாடுகள் பற்றி தெளிவாக இருக்க வேண்டும். அ.சா.நிறுவனம்றுவனங்களின் நோக்கும் பணியும் அவை உதவியளிக்க முன்வருகின்ற நபர்களுக்கும் அ.சா.நிறுவனம்றுவனங்கள் வளங்களைப் பெறுகின்ற முகவர் நிறுவனங்களுக்கும் தெளிவாக இருக்க வேண்டும். அ.சா.நிறுவனம்யினால் நிவர்த்திக்கப்பட முடியாத எதிர்பார்பபுக்களைத் தவிர்ப்பதில், குறிப்பாக வழங்கப்படும் உதவியின் மூலம் நேரடியாகப் பயனடைகின்ற குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் தொடர்பில், கவனம் செலுத்தியாக வேண்டும்.

- இரண்டாவதாக, அ.சா.நிறுவனங்கள் தமது நோக்கத்தையும் பணியையும் நடைமுறையில் பிரயோகம் செய்வது பற்றியும் தாம் உதவி வழங்க விரும்பும் மக்களின் வாழ்வாதாரத்தில் அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றியும் ஆவணப்படுத்த வேண்டும். சிறப்பான நடைமுறைகளும் கற்றுக்கொண்ட படிப்பினைகளும் கிரமமான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்: இவை, குறிப்பாக, பெண்கள் மற்றும் ஆண்களின் ஈடுபாடு, பங்கேற்பு ஆகியவற்றுடன், அனர்த்தக் குறைப்பு, அமைதிபூர்வ மீளளிப்பு மற்றும் மீளுகைக்கான சமூகத்தை ஆதாரமாகக் கொண்ட பயனுறுதி வாய்ந்த மூலோபாயங்கள் சம்பந்தமாக அமைதல் வேண்டும். செயற்பாடுகள் சம்பந்தமாகவும் உதவியை நேரடியாகப் பெறும் பெண்கள், ஆண்கள் மற்றும் சமூகங்களில் அவற்றின் தாக்கம் பற்றியும் செயலூக்கமுள்ள பங்கேற்பு பின்னூட்டலைப் பெறுவதற்காக கிரமமான கூட்டங்களை, உதாரணமாக மாதாந்தக் கூட்டங்களை, நடாத்த முடியும். கரையோரப் பகுதிகளின் புனருத்தாரண நடவடிக்கைகளில் பங்கேற்கும் முயற்சியாக சுனாமி அனர்த்திற்கு மீளளிப்பு

செய்ய முன்வந்துள்ள தனிப்பட்ட நபர்கள், உள்ளூர்க்காரர்கள், பயணத்தை மேற்கொண்டவர்கள் உள்ளிட, முன்முயற்சிகளில் மறைமுகமாகச் சம்பந்தப்பட்டுள்ளவர்கயளான பரந்த மக்கள் பிரிதநிதிகளும் அல்லது பங்காளர் குழுக்களும் இக்கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும். இந்த வகையான கூட்டங்கள் பாதிக்கப்பட்ட பெண்கள், ஆண்கள், சமூகங்களை உள்ளடக்கியதாகவும் அர்த்தமுள்ளவையாகவும் அமைய வேண்டும், அவர்களின் தனிப்பட்ட மற்றும் நேர சிரமங்களை மதிப்பதாகவும் இருக்க வேண்டும்.

- மூன்றாவதாக, அ.சா.நிறுவனங்கள், நிதியிடும் முகவர் நிறுவனங்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளில் கவனஞ் செலுத்த வேண்டும், நிதி வளங்களை வழங்கு வோருடனான ஒப்பந்தத்தையும் புரிந்துணர்வு உடன்படிக்கையையும் கடைப்பிடிக்க வேண்டும். செயற்பாடுகள் பற்றி தீமானம் எடுப்பது, நடைமுறைப்படுத்தல், அவதானித்தல், மதிப்பீடு செய்தல் குறித்து அறிவிப்பதற்காக காலோசிதமான, முறையான தாக்க மதிப்பீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். இவை இல்லாவிட்டால், பெறுமதிமிக்க வளங்களும் தொழிநுட்ப நிபுணத்துவமும் விரயமாகிவிடக் கூடும். அ.சா.நிறுவனம்களது செயற்பாடுகளின் எல்லா அம்சங்களுக்கும் பொருந்துகின்ற முக்கிய பெறுமானங்கள் பூரணமான வெளிப்படைத் தன்மையும் பதிலளிக்கும் பொறுப்பும் ஆகும், அவற்றின் சட்டபூர்வ தன்மைக்கு இவை மையமாக விளங்குகின்றன என்பதை ஊழலை அறவே சகித்துக் கொள்ளாமல் இருப்பது பற்றிய கோட்பாட்டை ஏற்றுக்கொள்வது அங்கீகரிக்கின்றது.

உண்மையில், அ.சா.நிறுவனங்கள் தம்முடைய மனிதநேய உதவியின் மூலம், தம்முடைய செயற்பாடுகள் மூலம் அடையப்பெற்ற உண்மையான தாக்கத்தை இனங் காணவேண்டும். அவதானிப்பு, மதிப்பீடு, பகுப்பாய்வு, அறிக்கை தயாரித்தல் ஆகியவற்றுக்கான பொறிமுறைகள், செயற்பாடுகளின் சாதகத் தன்மை பற்றியும் அதேசமயம், நோக்கமில்லாது ஏற்பட்ட பாதகங்கள் ஏதாவது இருப்பின் அவை பற்றியும் பிரதிபலிக்க வேண்டும். இதில் பால்நிலை சார் உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றுக்களும் உள்ளடங்க வேண்டும். இதன் மூலம், அசா.நிகள் தாம் உதவியளிக்க விரும்பும் மக்களுக்கும் விருந்தோம்பும் அரசுக்கும் ஆட்சிக் கட்டமைவுகளுக்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கும் கொடையாளிகளுக்கும் தாமே பதிலளிக்கும் பொறுப்பை ஏற்க முடியும். இத்தகைய மதிப்பீடுகள் அ.சா.நிறுவனம்களுக்கு நம்பகத்தன்மையைக் கொண்டுவர முடியும். நடைமுறைப்படுத்தல் போக்கில் கற்றுக் கொண்ட சிறந்த நடைமுறைகளையும் படிப்பினைகளையும் இனங்காண்பதை மேம்படுத்த முடியும்.

✍

**கோட்பாடு இல.10:** நாம், எம்முடைய தகவல், பிரச்சார மற்றும் விளம்பரப்படுத்தல் செயற்பாடுகளில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை பயனற்ற பொருட்களாக அல்லாமல் மாண்புள்ள மானுடர்களாக அங்கீகரிப்போம். செயற்பாட்டில் சமமான பங்காளிகள் என்ற வகையில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மரியாதை ஒருபோதும் இழக்கப்பட்டு விடக்கூடாது, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நலிவுற்ற தன்மைகள், அச்சங்கள் ஆகியவற்றை மாத்திரமன்றி, அவர்களது ஆற்றல்களையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் அனர்த்த நிலைமை பற்றிய ஒரு உண்மையான தோற்றத்தை நாம் எடுத்துக் காட்டுவோம். பொது மக்களின் விளைவு காட்டலை மேம்படுத்தும் பொருட்டு நாம் ஊடகங்களுடன் ஒத்துழைக்கும் அதேவேளையில், ஒட்டுமொத்தமான நிவார உதவியை அதிகப்படுத்தும் கோட்பாட்டின்மீது, பிரசாரத்துக்கான உள்நாட்டு வெளிநாட்டுக் கோரிக்கைகள் முக்கிய பங்கு வகிப்பதை அனுமதிக்க

மாட்டோம். பயனாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கு அல்லது எமது உத்தியோகத்தர்களின் அல்லது பயனாளிகளின் பாதுகாப்புக்குக் குந்தகமாக இருக்கும் நிலைமைகளில் ஊடகச் செய்திப் பிரச்சாரத்தைப் பெறுவதில் ஏனைய அனர்த்த மீளளிப்பு முகவர் நிறுவனங்களுடன் போட்டியிடுவதைத் நாம் தவிர்த்துக் கொள்வோம்.

→ **பத்தாவது கோட்பாட்டின் சிறப்பம்சம், பிரச்சார மற்றும் விளம்பரப்படுத்தல் செயற்பாடுகளில் பாதிக்கப்பட்ட மக்களின் கௌரவத்தையும் பந்தோபஸ்தையும் பாதுகாப்பதாகும். நிதிதிரட்டும் முயற்சிகளிலும் பொது தகவல் பிரச்சார இயக்கங்களிலும் பண்பான பொறுப்பு வாய்ந்த ஊடகப்பணியை இந்தக் கோட்பாடு அவசியப்படுத்துகின்றது.**

IFRC/ICRC யின் பத்தாவது கோட்பாடு, தகவல் பரிமாற்றமானது ஒட்டுமொத்தமான உதவியை அதிகப்படுத்தும் கோட்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஒத்துழைக்கும் விதத்தில் இடம்பெறவேண்டும் என்பதை அவசியப்படுத்துகின்றது. சகல விதமான தகவல் சேகரிப்பும் முகாமைத்துவமும் திரட்டல், பகுப்பாய்வு, பால்நிலை சார் மற்றும் வயது சம்பந்தமான பிரவுபடுத்தப்பட்ட தரவுக்கான ஏற்பாட்டை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்கையில், பாதிக்கப்பட்ட பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளதும் பிரதிநிதித்துவமுள்ள சமூகங்களதும் அக்கறைகள், ஆற்றல்கள் மற்றும் அபிலாஷைகளும் சகல மறுவாழ்வு, அபிவிருத்தி முயற்சிகளிலும் மையமாகக் கருதி பேணப்பட வேண்டும்.

இருபது ஆண்டுகால உள்நாட்டு மோதல், ஊடகத்தின் மீதான கடுமையான தணிக்கையிலும் அரசியல் கட்டுப்பாட்டிலும், முதன்மையாக, போருக்கு ஆதரவு திரட்டுவதற்கு ஊடகத்தைப் பயன்படுத்துவதிலும் முடிவடைந்துள்ளது. எனவே, இலங்கையில் தகவலின் தாக்கம் மற்றும் காரணப்படுத்தல் ஆகியவற்றை அறிந்திருப்பது இன்றியாதது, ஆதாரங்களை ஆபத்துக்குள்ளாக்காமல் கண்டிப்பாகப் பேணுவது இன்றியமையாதது: ஒவ்வொரு சமூகத்துக்குள்ளும் காணப்படும் பல்வேறு சமூகங்களுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையேயும் உள்ள அரசியல் குழுக்களின் பன்முகத்தன்மை தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தகவல் பதற்றத்தை அதிகரிக்கக் கூடும், மக்களை இடர்நிலையில் அமர்த்தும் என்பதை அங்கீகரிக்கும் அதேசமயத்தில், அ.சா.நிறுவனங்கள் தாம் கண்டறிந்தவற்றை பொதுமக்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். படிப்பனைகளையும் அறிவையும் ஏனையோருக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும், அவசரப் பிரச்னைகளையிட்டு மீளளிப்பது, முன்வைப்பது, வெளிக்கொண்டு வருவது ஆகியவற்றுக்கான தமது ஆணைஅதிகாரத்தை முன்னிறுத்த வேண்டும். உள்ளூர், நாடு தழுவிய மற்றும் சர்வதேசப் பிரச்சினைகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

வெளிப்படைத்தன்மை பற்றிய கோட்பாடு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலைமைகளில் தகுதியை அவசியப்படுத்தலாம். ஏனெனில், தகவல் தரும் வட்டாரங்களுக்குச் சில வேளைகளில் பாதுகாப்பு அவசியமாகலாம், எனவே அவ்வட்டாரங்கள் வழங்கும் தகவல்கள் இரகசியமாகப் பேணப்பட வேண்டிய அவசியமிருக்கலாம். இது, தனித்தனி இனச் சமூகங்கள் அல்லது முகாம்களில் துன்புறுத்தல், உடல் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களை அனுபவிக்கும் பெண்கள் போன்று சமூகங்களில் இருக்கும் குழுக்கள் பற்றிய கூருணர்வுத் தகவல்களைச் சேகரிப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவு பொருத்தமானது. தகவல் திரட்டுவதானது சமூகங்கள் மத்தியிலும் அவற்றுக்குள்ளும், குறிப்பாக பல கலாச்சாரங்கள் நிறைந்த பகுதிகளில் நிலவும் நிச்சயமற்ற தன்மைக்கும் கவலைகளுக்கும் கூருணர்வு மிக்கதாக இருக்க வேண்டும். தனிப்பட்ட அசா.நியின் சொந்தப் பிரச்சாரத்துக்காக பங்களிக்கும் தகவலைப் பெற்றுக் கொள்வதன்மூலம் அத்தகைய அக்கறைகளைக் கட்டியெழுப்பாமல் இருப்பதை அ.சா.நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும். ஏனைய மறுவாழ்வு மற்றும் அபிவிருத்தி முயற்சிகளில்

போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவை எச்சரிக்கை செய்யப்படுகின்றன. இலங்கையில் பரந்துபட்டு வாழும் பல்வேறு மக்களது அக்கறைகளையும் அபிலாஷைகயையும் கவனத்திற் கொள்வது ஸ்திரமான, நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்தை ஊக்குவிப்பதற்குரிய கூடுதல் சாத்தியத்தைக் கொண்டது. இலங்கையின் சிவில் சமுதாயம், வெளியிலுள்ள அமைப்பையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. டினவேதமது தொழில்முறை ஆற்றலில் இந்த ஆணையை மனதிற் கொள்ள வேண்டும். சமூகங்களுக்குள்ளும் உள்ளூர் மற்றும் சர்வதேச அ.சா.நிறுவனம்ளுக்கு இடையிலும் சமமற்ற அதிகார உறவுகள் அல்லது சந்தேகத்தை மீண்டும் ஏற்படுத்தாமல் இருப்பதை மனதிற் கொள்ள வேண்டும். தகவலைப் பகிர்ந்து கொள்வதில் உள்ளியல்பான போக்குகள் போதிய அளவு இல்லாத பட்சத்தில் அது எதிர்ப்பும் சந்தேகமும் தோன்ற வழிவகுக்கும்.

மறுபுறத்தில், ஊடகப்பணி தொடர்பான கூருணர்வு, முகாம்களில் குழப்பமான நிலை, அச்சம், வதந்திகள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் மீது சார்ந்திருப்பது ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணியின் பல்வேறு அம்சங்கள் குறித்து சகல உள்ளூர், சர்வதேசச் செயற்பாட்டாளர்களுக்கு காலோசிதமான, தெளிவான தகவல் கிடைக்கச் செய்வதைக் கட்டுப்படுத்தக் கூடாது. இலங்கையில் சமூகங்களுக்கு இடையிலான வன்செயல்கள் வெடிப்பது, சிறிய சம்பவங்கள் அல்லது வதந்திகளாலும், குறிப்பாக, ஏனைய சமூகங்களின் உறுப்பினர்கள் வன்செயல் மோதல்களில் ஈடுபடுவதற்காக இளம் மக்களை அணிதிரட்டுவதன் மூலமும் தூண்டப்படுபவை என்பது தெரிய வந்துள்ளது.

மக்களைப் பதிவு செய்வது, முன்னேற்றம் கண்டு வரும் மருத்துவச் சிகிச்சை நிலையங்கள், பங்கீட்டுப் பொருள்கள் வழங்குவது, சட்ட ரீதியான அந்தஸ்து, காணி உரித்துக்கள், நட்டஈட்டு வாய்ப்புக்கள், முகாம்களுக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்குமான வருங்கால நிர்வாகத் திட்டங்கள் தொடர்பில், கிரமமான தகவல் பகிர்வும் கூட்டுப் பகுப்பாய்வும் கற்றுக்கொள்ளலும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை. அனர்த்தங்களின்போது, உதவி தொடர்பான தகவலைப் பெற்றுக் கொள்வதில் ஆண்களைவிட பெண்களே சாத்தியம் குறைந்தவர்களாக இருக்கின்றனர். எனவே, தேர்ந்தெடுத்த அல்லது திரிபுபடுத்தப்பட்ட விதத்தில் வழங்கப்படக்கூடிய இரண்டாம் பட்சமான தகவலைப் பெண்கள் பெறுவது பொதுவான நிகழ்வாகும். இதைத் தவிர்க்கும் பொருட்டு பெண்கள் சமமான அளவில் தகவலைப் பெற்றுக் கொள்வதை உறுதிப் படுத்துவதும் நேரடியான தகவலைப் பெண்களுக்கு வழங்குவதும் முக்கியமானதாகும்.

அத்தகைய தகவல் சேகரிப்பானது உள்ளூர் மற்றும் சர்வதேச சம்பாஷணையை சம்பந்தப்படுத்த வேண்டும், ஊக்குவிக்க வேண்டும். சமூகத்திலிருந்து அரசாங்கம் வரையில் கொள்கைப் பிரச்னைகள் பற்றிய உள்ளூர் வலையமைப்புகளை மேம்படுத்த வேண்டும், அபிவிருத்தி செய்ய வேண்டும். இலங்கையில், மக்களால் உந்தப்பட்ட சமாதான, சமத்துவமுள்ள, நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திப் போக்கின் திசையில் உள்ளூர் சிவில் சமுதாய வலையமைப்புகளைக் கட்டியெழுப்பி, வலுப்படுத்துவதற்கு வாய்ப்பேற்படுத்த வேண்டும்.

# இணைப்பு

- பெயர்ச் சுருக்கங்களின் பட்டியல்

- IFRC/ICRC விளக்கக் குறிப்புக்களை உருவாக்குவதில் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள்

- திருகோணமலை ஆலோசனைக் கூட்டங்கள்

- துணை ஆவணங்களின் பட்டியல்

## சுருக்கப் பெயர்களின் பட்டியல்

| | |
|---|---|
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| CESVI | ஒத்துழைப்பும் அபிவிருத்தியும்: இத்தாலிய சுயாதீன நிறுவனம் |
| CFA | யுத்த நிறுத்த ஒப்பந்தம் |
| CIDA | கனேடிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் |
| CFA | யுத்த நிறுத்த ஒப்பந்தம் |
| CIDA | கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் |
| CPA | மாற்றுக் கொள்கைக்கான நிறுவனம் |
| DFID | சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் |
| DRC | டேனிஷ் அபிவிருத்தி மன்றம் |
| DWG | கொடையாளர் பணிக் குழு |
| CARITAS | நீதி, சமாதானம், அபிவிருத்திக்கான கத்தோலிக்க நிறுவனம் |
| FCE | சக வாழ்வுக்கான மன்றம் |
| FLICT | முரண்பாட்டு நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்முயற்சிகள் நிதியம் |
| GA | அரசாங்க அதிபர் |
| GTZ | டச் ஜெசல்சாப்ட் பியர் டெக்னீசியே சுசாமனார்பெட் |
| HRO | மனித உரிமைகள் நிறுவனம் |
| ICRC | சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் |
| IDP | உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் |
| IFRC | சர்வதேசச் செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம் |
| IMCAP | வறுமை. சமூகக் கொள்கை ஆய்வுக்கான உள்ளாற்றல்களை மேம்படுத்துதல் |
| INGO | சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனம் |
| INTERCOS | இத்தாலிய அ.சா.நிறுவனம் |
| JBIC | ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு வங்கி |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| MWRAF | முஸ்லிம் மகளிர் ஆராய்ச்சி, செயற்திட்ட அரங்கு |
| NGHA | அரசு சார்பற்ற மனிதநேய அமைப்பு |
| NGO | அரசு சார்பற்ற நிறுவனம் |
| NORAD | நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைப்பு |
| SAPNA | தெற்காசிய வாய்ப்புகள் வலையமைப்பு நிறுவனம் |
| SIDA | ஸ்வீடிஷ் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு |
| SSA | சமூக விஞ்ஞானிகள் சங்கம் |
| TRO | தமிழர் புனர்வாழ்வுக் கழகம் |
| UMCOR | நிவாரணத்துக்கான ஐக்கிய மெதடிஸ்த குழு |

| | |
|---|---|
| UN | ஐக்கிய நாடுகள் சபை |
| UNDP | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் |
| UNHCR | அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலயம் |
| UNICEF | ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் குழந்தைகள் நிதியம் |
| USAID | சர்வதேச ஒத்துழைப்புக்கான அமெரிக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு |
| VSO | கடல்கடந்த தொண்டர் சேவை |
| WB | உலக வங்கி |
| WFP | உலக உணவுத் திட்டம் |
| WUSE | கனேடிய உலகப் பல்கலைக் கழகச் சேவைவ |
| ZOA | கிறிஸ்தவ மனிதநேய உதவி அமைப்பு |

## IFRC/ ICRC விளக்கங்களை உருவாக்குவதில் பயன்படுத்தப்பட்டுள்ள உசாத்துணை ஆவணங்கள்

சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் இயற்கை அனர்த்தங்களைத் தடுத்தல் பற்றி இணக்கங் காணப்பட்ட முடிவுகள்:CSW: மகளிர் அந்தஸ்து பற்றிய ஆணைக்குழு (மார்ச் 2002) http://www.siyanda.org/search/summary.Cfm?nn=1550&Keywords=disaster%20reductions&SUBJECT=DonorO&StartRow=1&Ref-Sim>

"இடர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேசச் செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான நெறி முறைக் கோட்பாடுகள்" CHA: மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பும் பெர்கோ.ஃப் நிதியமும் (பெப்ரவரி 2005)

'அதிகாரமளிப்பற்கான பதிலளிக்கும் பொறுப்பு: அரசாங்க சார்பற்ற அமைப்புகளின் இடர்நிலை" ஏஎன்.யு: அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழகம்(ஜனவரி2004). http://apseg.anu.edu.au/degrees/pogo/discussion/papers/PDPO4-1 pdf

`இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவதற்கான கூட்டணியால் அமைக்கப்பட்ட மகளிரின் நிதியத்துக்கு ஆதரவளிக்கும் விண்ணப்பம் (CATCAW)": CATCAW (ஜனவரி 2005).http://www.cleancatch.org/id83.html

'அ.சா.நிறுவனங்கள் பற்றிய ஆய்வு: இலங்கை'ADB: ஆசிய அபிவிருத்தி வங்கி (1999). Gttp:www.adb.org/NGOs/docs/NGOsSriLanka.pdf

'சுயாட்சியா, சார்புநிலையா? வடக்கு-தெற்கு அ.சா.நிறுவனம் பங்காளித்துவங்கள்'
INTRAC: சர்வதேச அ.சா.நிறுவனம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (ஜூலை 2004)

'அனர்த்தத்திற்குப் பின்னரான நிலைமைகளில் மனிதநேய உதவி வழங்குவது பற்றி நிலைநிறுத்தப்பட்ட வழிகாட்டி நெறிகளைக் கடைப்பிடிப்பதற்கான அறைகூவல்: மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீபத்திய சுனாமிக்குப் பின்னரான அபிவிருத்திச் செயற்பாடுகளில் மீளளித்தலில் சிவில் சமுதாய உறுப்பினர்கள் விடுத்த அக்கறை பற்றிய அறிக்கை': (2005).

'அவசரகால நிலைமைகளில் எதிர்நோக்கப்படும் சவால்கள்': FAO: ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய ஸ்தாபனம்: <http://www.fao.oeg/sd/dim_pe1/docs/pe1_050102d_en.pdf>

'மறுவாழ்வுக்கும் அபிவிருத்திக்குமான சிவில் சமுதாய நிகழ்ச்சி நிரல்': சிவில் சமுதாய வட்டமேசை (ஜனவரி 2005) <http://wwwdailynews.lk/2005/01/22/fea03.html>

'இடம்பெயர்ந்த பெண்களின் சேமநலன் மற்றும உரிமைகள் சம்பந்தமான அக்கறை': அனர்த்த முகாமைத்துவத்துக்கான மகளிரின் கூட்டமைப்பு-மட்டக்களப்பு (ஜனவரி 2005) http://www.cleancatch.org/id71.html

'நிவாரணம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான முரண்பாட்டுக் கூருணர்வு அணுகுமுறைகள்': நடைமுறைப்படுத்தும் பங்காளிகளுக்கான : GTZ வழிகாட்டு நெறிகள்: GTZ: பெப்ரவரி 2005.

'தொழில்வாய்ப்பு ஈர்க்கும் முதலீட்டு வேலைத்திட்டம்: ILO. http://www.ilo.org/public/english/employment/recon/eiip/invest.htm

'இவாஞ்சலிசம் முகாந்திரத்தில் இலங்கை நிலைமையின் பரிமாணங்கள் :கேந்திர ஆய்வுகளுக்கான பிராந்திய நிலையம்' (1990) <http://www.ress.org/policy_studies/ps_5_3.html>

'பால்நிலை சார் மற்றும் அனர்த்த ஆதார நூல்':பால்நிலை சார் மற்றும் அனர்த்த வலையமைப்பு (2005) <http://online.northumbria.ac.uk/geography_research/gdn/>

'பால்நிலைசார் அம்சமும் சுனாமியும்': Oxfam International (மார்ச் 2005) www.oxfamamerica.org/.../briefingpapers/briefing_note.2005-03-30.6547801151/bn_tsunami_gender03305.pdf

'பால்நிலைசார் அம்சமும் ஆயுத மோதலும் மேலோட்ட அறிக்கை':BRIDGE: அபிவிருத்தி-பால், அபிவிருத்தி கற்கைகள் நிறுவனம், சசெக்ஸ் பல்கலைக்கழகம் (2004)
< http;//www.bridge.ids.ac.uk/reports/cep-conflict-report.pdf >

'அனர்த்தங்களில் பால்நிலை சார் சமத்துவம்: நிவாரணம் மற்றும் புனர்நிர்மாணத்தை ஊக்குவிப்பதற்கான ஆறு கோட்பாடுகள்'பல்சார் மற்றும் அனர்த்த வலையமைப்பு (ஜனவரி 2005)
http://online.northumbria.ac.uk/geography_research/gdn/resources/genderbroadsheet.doc

'சுற்றாடல் இடர் முகாமைத்துவத்தில் பால்நிலை சார் சமத்துவம்:: சுனாமி அனுபவம்': IUCN: உலகப் பாதுகாப்புச் சங்கம் (மார்ச் 2005)

http://www.iucn.org/tsunami/news_archive/news/gender-tsunami-experience.pdf

'மீட்சி மற்றும் மீள் நிர்மான மூலோபாயம், இலங்கை': ADB: ஆசிய அபிவிருத்தி வங்கி, JBIC: ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு வங்கி, உலக வங்கி (ஜனவரி.2005).
http://www.jbic.go.jp/japanese/base/topics/050131/pdt/srilanka.pdf
கற்றுக்கொண்ட கடினமான படிப்பினைகள்: சுனாமி மீளளிப்புகளுக்கான பால்நிலை சார் குறிப்புக்கள்': பால்நிலை சார் மற்றும் அனர்த்த வலையமைப்பு (ஜனவரி 2005)
http://online.northumbria.ac.uk/geography_research/gdn/resources/hardlessons-gendernote1.doc
'

'இலங்கையில் மனிதநேய நிலைமை: நிலவர அறிக்கை' OCHA:மனிதநேய விவகாரங்களுக்குரிய ஒருங்கிணைப்புக்கான ஐ.நா. ஆலுவலகம். (மார்ச் 2005)
http:www.humanitarianinfo.org/srilanka/infocentre/sitreps/doc/SriLanka_OCHA_humanitarian_situation_Report%2018-22%20March%20%20PDF.pdf.

‘இந்து மாகடல்: நில நடுக்கம்-சுனாமி 2005: இடைக்கால ஆய்வு’: OCHA: மனிதநேய விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐ.நா அலுவலகம் (மார்ச் 2005)
http://www.humanitarianinfor.org/srilanka/infocentre/donors/docs/Indian%20Ocean20MTR%20-%Sri%20Lanka%20_Final_.pdf

‘சுனாமிக்குப் பின்னரான நிலைமைகளில் பெண்களுக்கு எதிரரான பால்நிலை சார் அடிப்படையிலான வன்முறையைக் குறைப்பதற்கு சர்வதேச மற்றும் உள்ளூர் இடையீடுகள்’: அபிவிருத்தி பொருளியல் ஆய்வுக்கான ஐக்கிய நாடுகள் உலக நிறுவகம் (மே2004)
<http://www.eldis.org/static/DOC17637.htm>

‘இன முரண்பாடு மற்றும் சுனாமி அனர்த்தத்திலிருந்து தோன்றுகின்ற காணிப் பிரச்னைகள் பற்றிய அறிக்கை’: CPA : மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (2005)

http;//www.cpalanka.org/research_papers/Memo_land_Issues.pdf

‘மோதலில் உதவிக்கான தேர்வுகள்: வெளிக்கள அனுபவத்திலிருந்து பெற்ற படிப்பினைகள்’ CDA: அபிவிருத்தி செயற்பாட்டுக்கான ஒத்துழைப்பு நிறுவனம். (டிசம்பர் 2000)

‘சமாதான அமைப்புகள், இலங்கை’: SCOPP: சமாதான முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம், இலங்கை அரசாங்கம் (மே 2003)

http://www.peaceinsrilanka.org/insidepages/Partners/partners.asp

‘இலங்கையில் மகளிர் அமைப்புகளின் செய்திக் குறிப்பு: Doing gender (2005)
http://www.doinggender.com/index.php

‘சுனாமிக்குப் பின்னர் மீள் நிர்மாணம்: அதை எவ்வாறு சரி செய்வது’: சுற்றாடல் நிதிய நிறுவனம் (ஜனவரி 2005)
<http://www.efl/lk/pdf/tunami/Rebuildingtsunami.pdf >

‘வளப் பொதி: அபிவிருத்திக்கு முரண்பாட்டுக் கூருணர்வு அணுகுமுறைகளும் மனிதநேய உதவியும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும்: சமாதானம்

மற்றும் முரண்பாட்டுத் தாக்க மதிப்பீட்டுக்கான கருவித் தொகுதி' International Alert and Safeworld Programme (2003)
http://www.conflictsensitivity.org/resource_pack.html

'மனிதநேய உதவி ஒருங்கிணைப்பை மீள் பரிசீலனை செய்தல்': Institute for Governance and Accountabilities ,Virginia Tech (ஜூலை 2004)

http://www.jhu.edu/~istr/conferences/toronto/workingpapers/stephenson.max.pdf

'இயற்கை அனர்த்தங்களின் சமூக-பொருளாதாரத் தாக்கங்கள்: ஓர் பால்நிலை சார் பகுப்பாய்வு': லத்தீன் அமெரிக்கா, கரிபியனுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார ஆணைக்குழு, நிலையான அபிவிருத்தி மற்றும் மனிதக் குடியிருப்புக்கள் அலகு, மகளிர் மற்றும் அபிவிருத்தி அலகு.
http://www.eclac.cl/mujer/reuniones/conferencia_regional/manual.pdfi

'சியன்ட நேர்ப்படுத்தல்: மனிதநேய உதவியும் புனர்நிர்மாணமும்':BRIDGE: அபிவிருத்தி-பால், அபிவிருத்திக் கற்கைகளுக்கான நிறுவனம், சசெக்ஸ் பல்கலைக்கழகம் (பெப்ரவரி 2005).
http://www.siyanda.org/search/qlinx-countryfocus.cfm?code=SriLankafeb

'இலங்கை: சுனாமியால் உயிர்பிழைத்தோர் மீது பாலியல் வன்முறை பற்றி பணியாளர்கள் எச்சரிக்கை: AWID:அபிவிருத்தியில் மகளிர் உரிமைகளுக்கான அமைப்பு (ஜனவரி 2005)
http://www/awid.org/go.php?list=announcements&prefix=announcements&item=00217

'இலங்கை சுனாமி மீளளிப்பு: மாவட்ட கணக்காய்வு நடைமுறை: சுருக்கம்:HIC: மனிதநேயத் தகவல் நிலையம், இலங்கை (மார்ச் 2005)
http:www.humanitarianinfo.org/srilanka/infocentre/reference/docs/DistrictStocktaking_Exercise_Summary_Document_HIC.pdf >

நெறிமுறைக் கோட்பாடுகள்: அனர்த்த விளைவுபடுத்தல் வேலைத் திட்டங்களில் சர்வதேசச் செஞ்சிலுவை மற்றம் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம்/சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நெறிமுறைக் கோட்பாடுகள்'

IFRC/IRCS (டிசம்பர் 1995)
http://www.icrc.org/web/Eng/siteeng0.nsf/html/57JMNB?Open Document

'மனிதநேய சாசனம்": த ஸ்பியர் கருத்திட்டம். (திருத்தப்பட்ட பதிப்பு 2004)
http://www.spherleprojct.org/handbook/hdbkpdf/hdbk_hc.pdf

'இலங்கையின் மீள்நிர்மாணம், அபிவிருத்தி பற்றிய டோக்கியோ பிரகடனம்': MOFA: வெளிவிவகார அமைச்சு, ஜப்பான் (ஜூன் 2003)
http://www.mofa.go.jp/region/asia-paci/srilanka/conf0306/declaration.html

'சுனாமி விண்ணப்பம்: சுனாமி அனர்த்தத்தில் உயிர்தப்பிய பெண்களுக்குத் தேவைப்படும் அதியவசர உதவி': IPPF: International Planned Parenthood Federation (ஜனவரி 2005)

http://new.ippf.org/ContentController.aspx?ID=6144

'சுனாமி அவசரகால நிலை: முன்னைய இயற்கை அனர்த்தங்களில் இருந்து பெற்ற படிப்பினைகள்: ALNAP: மனிதநேயச் செயற்பாட்டில் வகை சொல்வதற்கும் செயற்பாட்டிற்குமான செயலூக்கமுள்ள கற்கை வலையமைப்பு (2005)
http://www.alnap.org/pubs/pdfs/tsunamibriefing05.pdf

'சுனாமியும் அங்கவீனத்துடனான மக்களும்: பரிசீலனைக்கான பிரச்னைகளின் சுருக்கம்':
ACFID: சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய மன்றம் (பெப்லுவரி 2005)

http://www.wfot.org.au/officefiles/Disability-Tsunami%20Emergency%20 Response%20Summary%20for%20ACFID%20Jan05.pdf

'ஐ.நா. DPOK பால்நிலை சார் நீரோட்டப்படுத்தல் பற்றி துணைச் செயலாளர் நாயகத்தின் கொள்கை அறிக்கை: DPOK: ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் நடவடிக்கைகள் (மார்ச் 2005)

http://www.pbpu.unlb.org/PBPU/Document.aspx?docid=630&classid=3&catid=22&subcatid=0

‘போதுமான அளவு உணவுக்கான உரிமையை முன்னேற்றமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான தன்னார்வ வழிகாட்டு நெறிகள்’ FAO:ஐக்கிய நாடுகள் உணவு, விவசாய ஸ்தாபனம் (ஒக்டோபர் 2004)

‘பாதிப்புத்தன்மை: கருத்துணர்வுக்கான விஷயம்’: Benfield Greig தீங்கு ஆராய்ச்சி நிலையம், லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி (நவம்பர் 2001)

http://www.benfieldhrc.org/SiteRoot/disaster_studies/working_papers/workingpaper4.pdf

‘சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மகளிரின் மனித உரிமை அக்கறைகள்’: APWLD: மகளிர் சட்டம், அபிவிருத்தி பற்றிய ஆசிய-பசுபிக் அரங்கு (மார்ச் 2005)

http://www.ap>wld.org/tsunami_humanrights.htm

‘இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் மகளிரின் செயற்பாடுகள்’: UNIFEM

http://www.womenwarpeace.org/sri_lanka/sri_lanka.htm#women_building_peace

‘மகளிர்: இயற்கை அனர்த்தங்களில் இடர் முகாமையாளர்கள், தெற்காசியா’: SSRI: சமூக விஞ்ஞான ஆய்வு நிறுவனம், மனோவாவில் உள்ள ஹவாய் பல்கலைக்கழகம்.

http://www.ssri.hawaii.edu/research/GDWwebsite/pdf/Ariyabandu.pdf

## திருகோணமலை ஆலோசனைக் கூட்டங்கள்

### உள்ளூர் அ.சா.நிறுவனங்கள்

01. CHA திருகோணமலை அலுவலகம்
02. கிழக்கிலங்கை புனர்வாழ்வு நிறுவனம்
03. கிண்ணியா விஷன்
04. அ.சா.நிறுவனம்களின் இணையம்
05. தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
06. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி அமைப்பு
07. திருகோணமலை மகளிர் சேமநல அமைப்பு
08. ஐக்கிய மகளிர் அமைப்பு
09. சமூக சேவைக் கல்வி, அபிவிருத்தி அமைப்பு

### உள்ளூராட்சி உறுப்புக்கள்

10. அரசாங்க அதிபரின் உதவியாளர், திருகோணமலை
11. பிரதேச செயலாளர், மூதூர்.
12. கிராம சேவை அதிகாரி, ஈச்சிலம்பற்று
13. மனித உரிமைகள் ஆணைக் குழு திருகோணமலை
14. திருகோணமலை சுனாமி செயலணி (UNV)

### உள்ளூர் தனியார் த் துறையினர்

15. வர்த்தக சம்மேளனம் , திருகோணமலை மாவட்டம்

### சர்வதேச கொடையாளர்கள்

16. GTZ திருகோணமலை
17. உலக மருத்துவர்கள்
18. கருணைப் படையினர்

19. UNDP
20. UNHCR
21. USAID
22. DRC

**தனிப்பட்டவர்கள்**

23. நிருபர், த சண்டே டைம்ஸ்
24. கடற்றொழிலில் ஈடுபடாத கரையோரச் சமூக ஆண்கள் இருவர்
25. வாழ்வாதாரத்தை இழந்த பல பெண்,ஆண் சிறு தொழில் முயற்சியாளர்கள்

**கூட்டங்களும் பயிற்சிப் பட்டறைகளும்**

26. 'தீங்கு ஏற்படுத்தா கோட்பாடுகளும் சுனாமிக்குப் பின்னரான வடகிழக்கில் முரண்பாட்டுக் கூருணர்வும்' பற்றிய பயிற்சிப் பட்டறை (ஏற்பாடு GTZ)
27. Bergdorf Foundation, CESVI, CHA கொழும்பு, CHA திருகோணமலை, Christian Aid, DRC, EHED/CARITAS, Hellenic Aid, ICRC, INRESOS,GTZ, GTZ-PIP, Mercy Corps, OXPAM, Save the Children,UMCOR, UNHCR, USAID, WFP, WUSE, ZOA Refugee Care ஆகியன கலந்து கொண்ட ஒருங்கிணைப்புக் கூட்டம்.

## <u>துணை ஆவணங்களின் பட்டியல்</u>

### <u>வழிகாட்டுதல்கள்</u>

அனர்த்தங்களில் பால்நிலை சார் சமத்துவம்: நிவாரணம் மற்றும் மீள் நிர்மாணத்தையும் ஊக்குவிக்கும் ஆறு கோட்பாடுகள் பால்நிலை சார் மற்றும் அனர்த்த வலையமைப்பு (ஜனவரி 2005)

‘சுனாமியும் அங்கவீனமுற்ற மக்களும்: பரிசீலனைக்கான பிரச்னைகளின் சுருக்கம்’:
ACFID: சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய மன்றம் (பெப்ரவரி 2005)

“இடர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேசச் செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான நெறி முறைக் கோட்பாடுகள்” பற்றிய விளக்கக் குறிப்புகள் அனுசரணை Berghof Foundation ( பெப்ரவரி 1995)

‘போதுமான அளவு உணவுக்கான உரிமையை முன்னேற்றமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான தன்னார்வ வழிகாட்டு நெறிகள்’ FAO:ஐக்கிய நாடுகள் உணவு, விவசாய ஸ்தாபனம் (ஒக்டோபர் 2004)

‘நிவாரணம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான சுயவிருப்ப வழிகாட்டுதல்கள்: நடைமுறைப்படுத்தும் பங்காளிகளுக்கான GTZ வழிகாட்டு நெறிகள்.‘: GTZ: Deutsche Gesellschaft fuer Teschnische Zusammenarbeit (பெப்ரவரி 2005)

‘இலங்கை: மீளுகை மற்றும் புனர்நிர்மாண மூலோபாயத்தின் வழிகாட்டும் கோட்பாடுகள்’: அனுசரணையாளர்கள்: ADB,JBIC, உலக வங்கி (ஜனவரி 2005)

கற்றுக்கொண்ட கடினமான படிப்பினைகள்: சுனாமி மீளளிப்புகளுக்கான பால்நிலை சார் குறிப்புக்கள்’: பால்நிலை சார் மற்றும் அனர்த்த வலையமைப்பு (ஜனவரி 2005)

‘வழிகாட்டு நெறி: அனர்த்த விளைவுபடுத்தல் வேலைத் திட்டங்களில் சர்வதேசச் செஞ்சிலுவை மற்றம் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம்/சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான வழிகாட்டு நெறிக் கோட்பாடுகள் (டிசம்பர் 1995)

‘மனிதநேய சாசனம்’: The SPHERE கருத்திட்டம் (திருத்தப்பட்ட பதிப்பு 2004)

<u>சுருக்கமான நடைமுறைத் தகவல்</u>

‘சுயாட்சியா, சார்புநிலையா? வடக்கு-தெற்கு அ.சா.நிறுவனங்களின் பங்காளித்துவங்கள்’:INTRAC: சர்வதேச அ.சா.நிறுவனம் பயிற்சி, ஆராய்ச்சி நிலையம் (ஜூலை 2004)

‘சுற்றாடல் இடர் முகாமைத்துவத்தில் பால்நிலை சார் சமத்துவம்: சுனாமி அனுபவம்’:IUCN: உலகப் பாதுகாப்புச் சங்கம் (மார்ச் 2005)

‘சமாதான அமைப்புகள்:இலங்கை’:SCOPP :சமாதானப் போக்கை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் இலங்கை அரசாங்கம் (மே 2003)

‘சியன்ட் நேர்ப்படுத்தல்: மனிதநேய உதவியும் புனர்நிர்மாணமும்’:BRIDGE: அபிவிருத்தி-பால், அபிவிருத்திக் கற்கைகளுக்கான நிறுவனம், சசெக்ஸ் பல்கலைக்கழகம் (பெப்ருவரி 2005).

‘பால்நிலை சார்பும் சுனாமியும்’: Oxfam International (மார்ச் 2005)

‘இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் மகளிரின் செயற்பாடுகள்’: UNIFEM: மகளிருக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம்.

**துணைக் கோவை: CHA**

(சமாதானம், சுனாமி தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட CHA ஆவணங்கள்)

CHA நிவாரண செயற்பாடுகள் கூட்டம் (மார்ச் 2005) Power Point Presentation

‘வழிகாட்டும் கோட்பாடுகள் பற்றிய CHA ஆவணப்படுத்தல் (ஜனவரி-ஏப்ரல் 2005)

‘சமாதான முன்முயற்சிகள் பற்றிய சுனாமிக்குப் பின்னரான செயற்பாடுகளின் சிக்கல்கள்’
பற்றிய CHA ஆவணப்படுத்தல்

<u>விரிவான ஆவணங்கள்</u>

சுனாமி அவசரகால நிலை: முன்னைய இயற்கை அனர்த்தங்களில் இருந்து பெற்ற படிப்பினைகள்: ALNAP: மனிதநேயச் செயற்பாட்டில் வகை சொல்வதற்கும் செயற்பாட்டிற்குமான செயலூக்கமுள்ள கற்கை வலையமைப்பு (2005)

‘இந்து மாகடல்: நில நடுக்கம்-சுனாமி 2005: இடைக்கால ஆய்வு’: OCHA: மனிதநேய விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐ.நா அலுவலகம் (மார்ச் 2005)

‘இலங்கை சுனாமி மீளளிப்பு: மாவட்ட கணக்காய்வு நடைமுறை: சுருக்கம்:HIC: மனிதநேயத் தகவல் நிலையம், இலங்கை (மார்ச் 2005)

முரண்பாட்டுக் கூருணர்வு

‘பால்நிலை சார் அம்சமும் ஆயுத மோதலும் மேலோட்ட அறிக்கை’: BRIDGE: அபிவிருத்தி-பால், அபிவிருத்தி கற்கைகள் நிறுவனம், சசெக்ஸ் பல்கலைக்கழகம் (2004)

மோதலில் உதவிக்கான தேர்வுகள்: வெளிக்கள அனுபவத்திலிருந்து பெற்ற படிப்பினைகள் CDA: அபிவிருத்தி செயற்பாட்டுக்கான ஒத்துழைப்பு நிறுவனம். (டிசம்பர் 2000)

‘சுனாமிக்குப் பின்னரான நிலைமைகளில் பெண்களுக்கு எதிரான பால்நிலை சார் அடிப்படையிலான வன்முறையைக் குறைப்பதற்கு சர்வதேச மற்றும் உள்ளூர் இடையீடுகள்’: அபிவிருத்தி பொருளியல் ஆய்வுக்கான ஐக்கிய நாடுகள் உலக நிறுவகம் (மே2004)

அபிவிருத்தி

‘அ.சா.நிறுவனங்கள் பற்றிய ஆய்வு: ADB: ஆசிய அபிவிருத்தி வங்கி (1999)

‘இயற்கை அனர்த்தங்களின் சமூக-பொருளாதாரத் தாக்கங்கள்: ஓர் பால்நிலை சார் பகுப்பாய்வு’: லத்தீன் அமெரிக்கா, கரிபியனுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார ஆணைக்குழு, நிலையான அபிவிருத்தி மற்றும் மனிதக் குடியிருப்புக்கள் அலகு, மகளிர் மற்றும் அபிவிருத்தி அலகு.

நலிவுறும் தன்மை: கருதுகோளுடன் தொடர்புடைய விடயம்’: Benfield Greig இடர் ஆராய்ச்சி நிலையம், லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி (நவம்பர் 2001)

‘மனிதநேய உதவி ஒருங்கிணைப்பை மீள் பரிசீலனை செய்தல்’: Institute for Governance and Accountabilities ,Virginia Tech (ஜூலை 2004)

<u>சிவில் சமூகம் மற்றும் பலதரப்பு அமைப்புகளின் அறிக்கைகள்</u>

‘மறுவாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான சிவில் சமூக நிகழ்ச்சி நிரல்’: சிவில் சமூக வட்ட மேஜை (ஜனவரி 2005)

` இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவதற்கான கூட்டணியால் அமைக்கப்பட்ட மகளிரின் நிதியத்துக்கு ஆதரவளிக்கும் விண்ணப்பம் (CATCAW)": CATCAW (ஜனவரி 2005).

'இன முரண்பாடு மற்றும் சுனாமி அனர்த்தத்திலிருந்து தோன்றுகின்ற காணிப் பிரச்னைகள் பற்றிய அறிக்கை': CPA : மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (2005)

'இலங்கை: சுனாமியால் உயிர்பிழைத்தோர் மீது பாலியல் வன்முறை பற்றி பணியாளர்கள் எச்சரிக்கை: AWID:அபிவிருத்தியில் மகளிர் உரிமைகளுக்கான அமைப்பு (ஜனவரி 2005)

இலங்கையில் மகளிர் அமைப்புகளின் செய்திக் குறிப்பு: Doing gender (2005)

'அனர்த்தத்திற்குப் பின்னரான நிலைமைகளில் மனிதநேய உதவி வழங்குவது பற்றி நிலைநிறுத்தப்பட்ட வழிகாட்டி நெறிகளைக் கடைப்பிடிப்பதற்கான அறைகூவல்: மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீபத்திய சுனாமிக்குப் பின்னரான அபிவிருத்திச் செயற்பாடுகளில் மீளளித்தலில் சிவில் சமுதாய உறுப்பினர்கள் விடுத்த அக்கறை பற்றிய அறிக்கை': (2005).

இலங்கையின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி பற்றிய கூட்டுப் பிரகடனம் (ஜூன் 2003)

'ஐ.நா. DPOK பால்நிலை சார் நீரோட்டப்படுத்தல் பற்றி துணைச் செயலாளர் நாயகத்தின் கொள்கை அறிக்கை: DPOK: ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் நடவடிக்கைகள் (மார்ச் 2005)

'இடம்பெயர்ந்த பெண்களின் சேமநலன் மற்றும் உரிமைகள் சம்பந்தமான அக்கறை': அனர்த்த முகாமைத்துவத்துக்கான மகளிரின் கூட்டமைப்பு- மட்டக்களப்பு (ஜனவரி 2005)

---

இந்த விளக்கக்குறிப்பு பற்றிய உங்களின் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இவற்றை,

தகவல் அலுவலர்
86, றொஸ்மிட் பிளேஸ்
மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது,

info@cha.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சலிலோ அனுப்பி வைக்க முடியும்.